# உயிராயுதம்

## குறுங்காவியம்



JPL
C13962

மு.சிங்கராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிராயுதம்

குறுங்காவியம்

13962 cc

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

பொது சன நூலகம்
10 DEC 2022
யாழ்ப்பாணம்

மு.சிங்கராயர்

KOHA
JPL

வெளியீடு
தமிழ் மதி
யாழ்ப்பாணம்

288444


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8111


| | | |
|---|---|---|
| நூல் | :- | உயிராயுதம் |
| விடயம் | :- | கவிதை |
| ஆசிரியர் | :- | முடியப்பு சிங்கராயர் |
| பக்கங்கள் | :- | xvi + 71 |
| முதற்பதிப்பு | :- | நவம்பர் 2022 |
| அட்டைப்படம் | :- | த.கபேஸ்சன் |
| பதிப்புரிமை | :- | திருமதி.மேரி விக்டோரியா சிங்கராயர் |
| வெளியீடு | :- | தமிழ் மதி, யாழ்ப்பாணம் |
| அச்சுப்பதிப்பு | :- | மதி கலர்ஸ் நல்லூர் |
| விலை | :- | 400/- |

| | | |
|---|---|---|
| Title | :- | Uirajutham |
| Subject | :- | Poem |
| Author | :- | Mudiyappu Singarayar |
| Pages | :- | xvi + 71 |
| First Edition | :- | November 2022 |
| Cover page | :- | T.Kabesan |
| Copyright | :- | Mrs.Mary Victoria Singarayar |
| Published by | :- | Tamil Mathy Jaffna |
| Printers | :- | Mathi Colours Nallur |
| Prize | :- | 400/- |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

சான்றோன் ஆக்கித்
தன் கடன் செய்த
என் தந்தை
கஸ்பார் முடியப்புவுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசி உரை

ஆசிரியர் திரு.முடியப்பு சிங்கராயர் அவர்களின் 'உயிராயுதம்' என்ற நூல் அவரது எழுத்துருவாக்கங்களின் வரிசையில் இன்னுமொரு புதுப்பிறப்பாகும். இலக்கியத்துறையில் இவருக்கு சிறந்த புலமையும் ஆழ்ந்த ஈடுபாடும் உண்டு. முதிர்ந்த வயதிலும் இவர் தனது அயரா உழைப்பினாலும், விடாமுயற்சியினாலும் பல படைப்புக்களை வெளிக் கொணர இறைவன் இவரை ஒரு கருவியாக உருவாக்கியுள்ளார்.

பாஷையூரில் பிறந்து வளர்ந்த இவர் தமது இருபதாவது வயதில் எழுத்துத்துறையில் தடம்பதித்தார். மண்வாசனைக்குரிய கலைத்துவச் சிறப்பும், பக்திப் பாரம்பரியமும் அவருடைய அனைத்து ஆக்கங்களிலும் தெளிவாக மிளிர்கின்றன. இவரது தூதுபோ தென்றலே, வியாகுல அன்னை வெண்பா, மடுஅன்னை பிள்ளைத் தமிழ் நூல்கள் இவரின் மறை ஞானத்தையும் கலைநுட்பங்களையும் எடுத்தியம்புகின்றன. தனது முதுமை நாட்களிலும் தளரா மனத்துடனும், இறைப்பற்றுடனும் தனது படைப்புக்களை உருவாக்கி வெளியிடுவதை உளமாரப் பாராட்டி நிற்கின்றோம்.

'உயிராயுதம் வெளியிடப்படும் வேளையில் இறையாசீர் இவருடன் என்றும் இருக்க இறையருள்வேண்டி நிற்கின்றேன்.

அருட்திரு ம.ஜெறோ செல்வநாயகம்
பங்குத்தந்தை
புனித அந்தோனியார் ஆலயம்
பாஷையூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

முதுபெருங்கவிஞர். மு.சிவகராயர் முன்னர் எழுதிய கவிதை களைப் படித்திருக்கிறேன். நல்ல உண்மையான கிறிஸ்தவக் கவிஞ னொருவனின் பக்திப் பிரவாகத்தை அவரது நூல்களிலே கண்டேன். அவரது 'தூதுபோ தென்றலே' என்ற கவிதை நூலுக்கு ஈழத்துத்தற்காலக் கவிதை நூல்களிலே தனித்துவமான முக்கியத்துவம் உண்டு எனக் கருதலாம்.

இன்று யாப்பு நெறி நின்று கவிதை எழுதுபவர்கள் மிக அருந்தலாகவே உள்ளனர். யாப்பின் பலத்தை நன்கு பயன்படுத்திக் கவிதையெழுதிய வர்கள் நின்று நிலைக்கிறார்கள். காலத்திற்கேற்பப் புதுக் கவிதை மரபுக் கவிதையென்று பகுத்து நோக்குகின்றார்கள். இந்தப் பகுப்பில் எனக்கு உடன்பாடில்லை. மரபாக இருந்தாலென்ன. புதிதாக இருந்தாலென்ன கவிதை என்பது ஒன்றுதான். அதைக் காணுகின்றவர்களிலும் கையாளு கின்றவர்களிலுமே வேறுபாடு உண்டு எனக் கருதுகிறேன்.

அற்புதமான பக்திக்கவிஞரான இவர் இப்போது சமகால அரசியற் பின்புலத்தையும் பாடுபொருளாக்கிக் கவிதை செய்திருப்பது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. 'இலக்கியம் காலத்தின் கண்ணாடி' என்பதைக் கவிஞர் உணர்ந்துள்ளார்.

இலங்கையின் வடபகுதியிலே நடந்த யுத்தக் கொடுமையினைத் தன் கவிதையென்னும் 'கமராவுக்கூடாகப் பதிவுசெய்துள்ளார். கவிஞர் நேரிற்கண்டாரோ அல்லது கற்பனையிலே பார்த்தாரோ தெரியாது. கவிதைகள் உணர்வுபூர்வமாக நெஞ்சைத்தொடுகின்றன. உதாரண மாகச் சில கவிதைகளைச் சுட்டிக்காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தும்பிகூடி இசைவடித்த சோலை இன்று
துயர்க்காடாய் மாறியதே! பேயும் அஞ்சும்
கும்மிருட்டில் பிணத்திலேறிக் கடந்து வந்தோம்
“கூகையொலி கேட்குதிங்கே விரைவாய்ச் செல்வோம்
தம்பிவாடா தந்தையொடு தங்கை சேர்ந்து
தாயருகே என்றுசொல்லிக் கையைப் பிசைந்து
நம்பிக்கை கருகிவிட்ட நினைவுசுமந்து
நாதியற்ற கண்மணியும் நிலத்தில் அமர்ந்தாள்!

இவ்வாறு பல கவிதைகள் அமைந்துள்ளன. ஷெல், பதுங்குழி, குண்டுவீச்சு, துப்பாக்கிச்சூடு என்று யுத்தநிகழ்வுகளைப் பதிவுசெய்துள் ளார். கதையைச் சொல்லிச் செல்ல விருத்தயாப்பு மிகவும் பொருத்த மானது. இதனாலேதான் கவிஞர் விருத்தயாப்பைக் கையாண்டுள்ளார் எனக் கருதலாம்.

காவியப் புலவனுக்குரிய நோக்குநிலை, கற்பனை அழகியல் முதலான பலவும் காவியத்திலே பதிவாகியுள்ளமையைக் காணமுடிகின் றது. அற்புதமான உவமைகளை மிக லாவகமாகக் கையாண்டுள்ளார்.

கவிஞரின் இந்தக் காவியத்தை படிப்போர் நாம் பட்ட துன்ப துயரங் களை, இழந்தவற்றை ஒரு கணம் நினைவுகூருவர். கவிஞர் நல்ல சுகபலத்துடன் இருந்து தமிழுக்கும் தமிழ்க் கவிதைக்கும் பணிசெய்ய வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**
**முந்நாள் தமிழ்த்துறை தலைவர்**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

துயர்க்காலத்தை எளிதிற் கடந்தாலும் அதனுடைய நினைவுகளை அப்படி எளிதாகக் கடந்து விட முடியாது என்பதற்கு ஏராளம் இலக்கிய சாட்சியங்கள் வரலாறு முழுவதிலும் உண்டு. ஏதோ ஒரு வகையில் அந்தத் துயரத்தை மீட்டுக் கொண்டேயிருக்க விரும்பும் மனித மனத்தின் வெளிப்பாடே இதற்குக் காரணமாகும். அந்தத் துயரம் நிகழும்போது அதைக் கடந்து விடத் துடித்த மனம், பின்னர் அதை நினைத்து நினைத்து மீட்டுப்பார்த்துக் கொள்கிறது. இது விசித்திரமான ஒன்றே. மனதின் விந்தையே இதுதான். மகிழ்ச்சியோ துயரோ எதையும் எளிதில் மறந்து விடாது மீட்டுப் பார்த்துக் கொண்டேயிருப்பது. அதிலும் இழப்பிலும் துயரிலும் அது கொண்டுள்ள நாட்டம் புரியாத புதிரே! அதிலே ருசியை, இன்பத்தை அனுபவிக்கத் துடிப்பது. இதைத்தான் அவலச்சுவை என்பர். இதில் நன்மையும் உண்டு. நட்டமும் உண்டு. அந்தத் துயரத்தை புற நிலையில் - யதார்த்தத்தில் - கடந்தாலும் அகநிலையில் (நினைவுகளில்) கடக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டேயிருப்பது நட்டமாகும். இது உள நெருக்கடியை, தீராத அகச் சிக்கல்களை (Truma) ஏற்படுத்திக் கொண்டிருப்பது. அப்படிக் கடக்க முடியாமல் அதை நினைவில் மீட்டு மீட்டு கலையாகவும் இலக்கியமாகவும் வெளிப்படுத்திக் கொள்ளும்போது அதன் மூலம் இரத்தமும் சதையுமான மெய் வரலாறு ஒன்று நமக்குக் கிடைக்கிறது. சமவேளையில் பெறுமதியான கலை, இலக்கிய வெளிப்பாடுகளும் கிடைக்கின்றன. இது நன்மை - லாபம் - ஆகும். ஈழப்போராட்டத்திலும் இதுதான் நிலவரம்.

ஈழப் போராட்டம் மகத்தான கனவுகளோடும் அந்தக் கனவுகளை எட்டுவதற்கான இலட்சியத்தாகத்தோடும் எழுச்சியடைந்தது. எந்தப் போராட்டத்திலும் நிகழும் ஏராளம் திருப்பங்கள், நெருக்கடிகளைப் போல ஈழப்போரிலும் நிகழ்ந்தது. குறிப்பாக ஏராளமான துயரக்களங்கள். இடையிடையே மகிழ்ச்சியளிக்கக் கூடிய சூழல்கள் உருவாகினாலும் இறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாக ஈழப்போராட்டம் தோல்வியடைந்து துயரிலேயே போய் முடிந்தது. ஆனாலும் இதன் இன்னொரு விளைவாக ஏராளமான எழுத்துப் பிரதிகளும் கலை வெளிப்பாடுகளும் வந்து கொண்டேயிருக்கின்றன. ஈழ யுத்தம் முடிந்த பிறகு கனவுச்சிறை, Box, இச்சா, ஸலாம் அலைக், ஆதிரை, அசேரா, ஊழிக்காலம், பார்த்தீனியம், கசகறணம், ஆயுத எழுத்து, நஞ்சுண்டகாடு, விடமேறிய கனவு, கானல் தேசம், ஆயுத வரி, ஜப்னா பேக்கரி, குமிழி, UP 83 எனப் பல நாவல்கள் வந்துள்ளன. இதைவிட ஏராளம் கவிதைகளும் சிறுகதைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. சினிமா, ஓவியம், ஒளிப்படங்கள் எனப் பல வகையான வெளிப்பாடுகளும் வந்து கொண்டேயிருக்கின்றன.

இவற்றைப் படிக்கும்போதும் பார்க்கும்போதும் நமக்குச் சிலவேளை கோபம் ஏற்படுகிறது. எதற்காக இவற்றைப் படிக்க வேண்டும்? பார்க்க வேண்டும் என்று. ஏனென்றால் இந்தத் துயரங்களை நேரிலே, வாழ்விலே அனுபவித்தது போதாதா? மீண்டும் அதை மீள மீள நினைத்துப் பார்த்து அந்தத் துயரக்குழிக்குள்ளே நாம் சுழன்று அழிந்து கொண்டிருக்க வேண்டுமா? என உணரும் போது நமக்குக் கோபம் வருகிறது.

இன்னொரு நிலையில் "அட இதையெல்லாம் நாம்தான் கடந்து வந்தோமா? இதற்குள்தான் நாம் வாழ்ந்திருக்கிறோமா?" என்று எண்ணும்போது நம்மையறியாமலே நமக்கு ஒரு வகையான மகிழ்ச்சியும் வியப்பும் எழுகிறது. இதை மீள நாம் படிக்கும்போது அல்லது பார்க்கும் போது அதற்குள் நம்மை மீள நிகழ்த்திப் பார்த்துக் கொள்கிறோம். எந் தத் துயரமும் எந்தக் கடினமும் அதை அனுபவிக்கும்போது - அதனுடைய சமகாலத்தில் - மிகக் கடினமாகவே இருக்கும். ஆனால், அதைக் கடந்து விட்டால் அது நம் நினைவுகளில் இனிக்கும் விசித்திரமாக மாறி விடுகிறது. அப்படித்தான் இதுவும். இதை நாம் நினைக்கும்போது நமக்கும் இனிப்பாக உள்ளது. இதைப் பிறருக்குச் சொல்வதில் - தெரியப் படுத்துவதில் ஒருவிதமான இனிப்பு - மகிழ்ச்சி - ஏற்படுகிறது.

இன்னொன்று, இது சற்று வேறானது. உடனிகழ்காலத் துயரம் என்பது பல விதங்களால் ஆனது. சிலவற்றுக்கு நாம் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்போம். சிலவற்றுக்கு பிறர் காரணமாக இருப்பர். இந்தப் பிறர் என்பதை நாம் தனி நபர்கள் என்பதோடு இனம், மதம், சாதி, வர்க்கம் எனவும் பொருள் கொள்ள வேண்டியது அவசியம். பல சந்தர்ப்பங்களிலும் இனம், மதம், மொழி, நிறம், பிரதேசம், பால் போன்ற வேறுபடுத்தல்கள் மிகப் பெரிய மானுட அவலத்தைத் தோற்றுவித்து, மானுடத்துயரை அளித்து விடுகின்றன. ஈழப்போராட்டத்திலும் இவை நிகழ்ந்துள்ளன. அத்துடன், இதில் தனியே பிற தரப்புகள் மட்டும்தான் சம்மந்தப்பட்டிருக் கும் என்றில்லை. தெரிந்தோ தெரியாமலோ நாமும் ஏதோ வகையில் சம்மந்தப்பட்டு விடுவோம்.

ஈழப்போராட்டத்தில் அதன் வீழ்ச்சிக்கும் தோல்விக்கும் நாமும் காரணமாக இருந்திருக்கிறோம். நம்முடைய தவறுகள், அறியாமைகள், அதீத நம்பிக்கைகள் இதற்குக் காரணம். அதைப்போல எதிர்த்தரப்புகளின் ஒடுக்குமுறையும் அதன் தந்திரோபயங்களும் இருந்துள்ளன. முக்கிய மாக இலங்கை அரசின் ஒடுக்குமுறையும் சிங்கள மேலாதிக்கமும். இவை இழைத்த துயரத்தை, அது உண்டாக்கிய அகப் புறச் சேதங்களை, தாக்கங்களை வெளிப்படுத்தும்போது ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்ப்புக் குரலை தொடர்ந்தும் பதிவு செய்து விடுகிறோம். அதேவேளை இழைக் கப்பட்ட அநீதியை உலகறியச் செய்யும் காரியமும் நிகழ்கிறது. அழிக்க முடியாத வரலாற்று அநீதியை, வரலாற்றுத் துயரை காலத்தில் பதிவு செய்து வரலாற்றுக்கே கொடுத்தும் விடுகிறோம். இதன் வழியே நாம் நமக்கான நீதியையும் கோருகிறோம்.

மறுவளமாக இந்தப் பதிவுகள், வெளிப்படுத்தல்களின் வழியாக நம்முடைய கடந்த காலத்தைப் பற்றிய மீள்பார்வை ஏற்படுகிறது. இது முக்கியமான ஒன்று. இந்த மீள்பார்வைதான் மெய்யாகவே நாம் தொட ரும் துயரத்திலிருந்தும் கடினமான கடந்த காலத்தின் நிழலிலிருந்தும் வெளியேறுவதற்கான அடித்தளத்தை உருவாக்குவது. சார்பற்று, மெய் யாகவே இதன்போது முன்வைக்கப்படுகின்ற விமர்சனங்களும் மறு பார்வைகளும் நம்மைப் பதப்படுத்துகின்றன. நம்முடைய வழியைச் சீராக்க முயற்சிக்கின்றன. மகத்தான படைப்பு எதுவும் இதைச் செய்யும். அல்லது இதைச் செய்வதன் மூலம் அந்தப் படைப்பு மகத்தானதாக மாறி விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி நன்மைகளும் தீமைகளும் நிறைந்த இந்தத் துயரப் பரப்பை எப்படி அணுகுவது என்பதையிட்டு ஏராளம் விவாதங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஏராளம் கேள்விகள் எழுகின்றன. இதில் எது சரி, எது தவறு என்று அறுதியிட்டுக் கூற முடியாது. ஏற்கனவே சொல்லப்பட்டதைப்போல இது லாபமும் நட்டமும் ஒரே நேரத்தில் இணைந் திருக்கும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றது. இரண்டு பக்கங்களின் சம விகித இணைவின் பெறுமதியே நாணயத்தின் பெறு மதியாகிறது. என்பதால் இந்த இரண்டையும் நாம் விரும்பியோ விரும் பாமலோ ஏற்றுத்தான் ஆக வேண்டும். இங்கே இந்த “உயிராயுதம்“ என்ற குறுங்காவியத்தையும் நாம் இந்த நோக்கில்தான் பார்க்க வேண்டி யுள்ளது. இதை ஆக்கி அளித்திருக்கும் திரு.மு.சிங்கராயரும் அப்படியான உளநிலையில்தான் செய்திருப்பார் என்று நம்புகிறேன். இந்தக் கவிதை கள் அதற்குச் சாட்சியாக உள்ளன.

தேவை கண்டா பயணித்தோம்!
துடியாய்த் துடித்து இங்குவந்தோம்!
நாவை இழந்து நமதுரிமை
நிலத்தைத்துறந்து நடைப்பிணமாய்
சாவை நேரில் சந்தித்தோம்!
சரிதம் காணப் பீடையிந்தத்
தீவைப் பிடித்து உலுக்கவொரு
தருணம் வந்து வாய்த்ததுவோ!

என்ற துயர வரிகள் இதை நிரூபிக்கின்றன.

இது வன்னியில் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கைப் படை களுக்கும் (இலங்கை அரசுக்கும்) இடையில் நடந்த யுத்தத்தைப் பற்றிய, அந்தக் காலத்தைப் பற்றிய, அதற்குள் சிக்குண்டு அவலப்பட்ட மனிதர் களைப் பற்றிய கதைகளின் கவிதை நிலைப்பட்ட வெளிப்பாடாகும். இறுதிப்போர் தொடங்கிய 2000 த்தின் பிற்கூறிலிருந்து போர் முடிந்த பிறகு படையினரிடம் சரணடைந்து அகதி முகாம்களில் சிறையடைக் கப்பட்டது வரையான காலப்பகுதியின் நிகழ்ச்சிகளையும் நிலவரத்தை யும் ஒரு குடும்பத்தின் வழியாகச் சொல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் வன்னியின் அழகும் சிறப்பும் பாடப்படுகிறது.

பச்சையாடை போர்த்தாற் போல் பசும்புல் மஞ்சம்!
பழச்சுவைத்தேன் ஊற்றுகின்ற வாழைத் தோட்டம்!
இச்செகத்து வானைநீவிப் பறக்கும் புட்கள்
இருவிழிக்கு விருந்தளிக்கும்! வலிமை பெற்றுத்
துச்சமென வரும்பகையைத் தூக்கி எறியும்
திறல் வளர்த்தபெருங் கூட்டம்! வன்னி மண்ணின்
மிச்சமுள்ள வளங்களினைச் சொல்ல எனக்கு
மேலுமொரு நாவேண்டும் என்றால் பொய்யோ!

என்று அழகிய, சிறப்பான வன்னியில் மக்களின் வாழ்க்கை எப்படி அழகாகச் சிறப்பாக இருந்தது என்று கூறப்படுகிறது. அமைதியாக - கிராமியத் தன்மையோடு வாழ்ந்து கொண்டிருந்த வன்னி எப்படி யுத்த களமாக மாறுகிறது. அப்படி மாற்றப்படும்போது எப்படி அது சிதைகிறது. அங்குள்ள மக்கள் மட்டுமல்ல, அந்தச் சூழலும் எப்படி உருவழிந்து சிதைந்து போகிறது என்பதைச் சொல்கிறார் சிங்கராயர்.

ஏவுகணை புயலாக வாரி அழித்த
உயிர்த்தொகையின் கணக்கென்ன? சுழலும் காற்று
தூவுகின்ற சருகுகள்போல் மண்ணில் புதைந்து
துடிப்பவர்கள் யார்யாரோ? மேலும் கொடிய
சாவினிலும் உறவுசொல்லி அழுவா ரில்லை!
சொத்தழிவு நெருடலினால் தவிப்பார் எவரோ?
நாவுலர்ந்து மயங்கிவிழும் மனிதப் புழுக்கள்
நாதியற்று வாடுவதைப் பாராய் உலகே!

என இறுதி யுத்தச் சூழல் விரிக்கப்பட்டு, அதன் முடிவு எப்படி யானது? அதன் பிறகு அகதிகளாகச் சிறைப்பிடிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதரும் எதிர்கொள்ள நேரிட்ட அவலங்கள் எப்படியானவை என்று சொல்லப் படுகிறது.

இதை ஏற்கனவே பலரும் பல விதமாக எழுதியுள்ளனர். இங்கே சிங்கராயரும் தன் நோக்கில் எழுதியிருக்கிறார். ஒவ்வொருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு விதமாக இதைக் காண்கின்றனர். தாம் காண்பதை அதன் வழியே ஒவ்வொரு விதமாக வெளிப்படுத்துகின்றனர். இதனால் வெவ் வேறு விதமான காட்சிகள் தெரிகின்றன. பல கோணங்களில் உண்மை புரிகிறது. ஆனால் இவர்கள் எல்லோருக்குள்ளும் ஒரு ஒற்றுமை உண்டு. அது ஒடுக்குமுறைக்குள்ளாகும் மக்களின் நிலை நின்று இவற்றைப் பார்ப்பதாகும். மேலும் இதை விரிவாக்கிச் சொன்னால், ஒடுக் கும் தரப்பை எதிர்க்க, எதிர்த்து விடுதலை காண முயற்சிப்பது. நிகழ்ந்த மானுட அவலத்தையும் மானுடத் துயரத்தையும் நேர்மையாக - சாட்சி பூர்வமாகப் பதிவு செய்ய விளைவது. நீதியைக் கோருகின்ற மக்கள் தரப்பிலிருந்து இதை விட வேறு என்னதான் செய்து விட முடியும்?

சிங்கராயரின் மனதில் ஆயிரமாயிரம் காயங்கள் ஆறாத வலி யோடு நிணமாக இரத்தம் ததும்பிக் கிடக்கின்றன. நெஞ்சம் நிரம்ப நெருப்பு கனன்று கொண்டிருக்கிறது. மனம் முழுவதும் கண்ணீரால் நிரம்பி யுள்ளது. மிக எளியதொரு வாழ்க்கையை, நிம்மதியோடு சொந்த மண்ணில் வாழ முடியாமல் இருக்கிறதே என்ற ஏக்கமும் துயரமும் அவரை நிலைகுலைய வைக்கின்றன. இது அவருக்குள்ளே ஆயிர மாயிரம் கேள்விகளை எழுப்புகின்றது. இதற்கு அவரால் விடையைக் காண முடியவில்லை. பதிலாக, நடந்தவற்றையாவது பதிவு செய்து கொள்வோம் என்ற எண்ணமே மேலெழுகிறது. அதன் மூலம் நாளை இந்த உலகின் மனச்சாட்சிக் கதவுகள் தட்டப்பட்டு என்றாவது ஒரு நாள் நீதியின் மணிகள் ஒலிக்க மாட்டாதா, ஒளி சுவறாதா என்ற ஒரு எதிர்பார்ப்பு உண்டு.

இதை அவர் ஒரு காவிய வடிவத்தின் மூலம் சொல்ல முயற் சித்துள்ளார். ஆனால், காவியத்துக்கான கட்டமைப்பும் உள்ளடக்கங்களும் அதற்கான பாத்திரங்கள், நிகழ்ச்சிகள் போன்றவையும் போதாதுள்ளன. அதற்கமைய செறிவாக ஒருங்கிணைக்கப்படவுமில்லை. ஆகவே இதை நாம் ஒரு நெடுங்கவிதை என்றே பெருமளவுக்கும் கொள்ள முடிகிறது. இந்த நெடுங்கவிதையை அவர் வெவ்வேறு இயல்களாகப் பிரித்துள்ளார். ஒவ் வொரு இயலுக்கும் அது வெளிப்படுத்தும் அல்லது சாராம்சப்படுத்தும் பொரு ளுக்கு அமையத் தலைப்பிட்டுள்ளார். மறுவளமாகச் சொன்னால், வெளிப் பாட்டுப் பொருளுக்கமைய இயல்கள் வகுக்கப்பட்டுள்ளன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கராயர் தன்னுடைய வெளிப்பாடுகளைச் செய்வதற்கு இந்தக் கவிதை வடிவத்தை - மரபுக் கவிதையை - எடுத்திருக்கிறார். மரபுக் கவிதையிலும் வெவ்வேறு கூறுமுறைகள் உண்டு. அவற்றில் சில வற்றை (அகவல், அறுசீர் விருத்தம், மற்றும் ஒரு சில வெண்பாக்கள்) சிங்கராயர் எடுத்தாண்டிருக்கிறார். சில அவருக்கு இலகுவாக - வாலாயப் பட்டிருக்கின்றன. சில அவருடன் முரண்படுகின்றன. இலக்கியத்தில் மட்டுமல்ல, வாழ்க்கையிலும் உறவிலும் இத்தகைய முரணுக்குள்ளிருக் கும் ஊடல் இன்பமூட்டுவதல்லவா! இங்கும் இதுதான் நிகழ்கிறது.

தொகுத்துச் சொன்னால் பல கவிதைப் படைப்புக்களை தந்த கவிஞர் மு.சிங்கராஜா அவர்கள் தன் காலத்தில் நிகழ்ந்த நீதிமறுப்புச் செயல் ஒன்றுக்கான தன்னுடைய எதிர்வினையை இங்கே முன்வைத் திருக்கிறார். தன் வாழ்சூழலில் நிகழ்ந்த மானுடப் பேரவலமொன்றை வரலாற்றின் முன்னே வைத்து நீதியைக் கோருகிறார். யாராலும் கேட்பதற்கு முடியாதிருந்த, இன்னும் நீதி வழங்க முடியாதிருக்கின்ற மனிதர்களின் பேரவல வாழ்க்கையைப் பதிவு செய்திருக்கிறார். இதன் மூலமாகத் தன்னுடைய வரலாற்றுக் கடமையொன்றைச் செய்திருக் கிறார். இதனையிட்டு அவருக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்.

- கருணாகரன்

கவிஞர் - எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுக உரை

கவிஞர் மு.சிங்கராயர் அவர்களை கடந்த முப்பது ஆண்டுகளாக அறிவேன். தொண்ணூறுகளில் அவர் யாழ்ப்பாணம் புனித றோக்ஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் உப அதிபராக தனது ஓய்வினை அண்டிய காலத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் நான் ஆசிரியப்பணியின் தொடக்க காலத்தில் அங்கு இணைந்தேன். அன்றில் இருந்து அவருடனான எனது உறவு தொடர்கின்றது. நாடகக் கலையிலும் தமிழிலும் அவரிடமிருந்த ஆளுமையும், என்னிடமிருந்த ஆர்வமும் பணிக்காலத்தில் மகிழ்வுடன் இணைந்து பணியாற்றச் செய்தன. பாடசாலை ஆசிரியர்களைக் கொண்டு அவர் தயாரித்த நாடகமொன்றில் அவரின் கீழ் நடித்த அனுபவம் முதல், அவரது மூத்த கலை அனுபவங் களைக் கேட்டு என்னை ஆழப்படுத்தியது வரையில், சக ஆசிரியராக பணியாற்றியதைவிட ஒரு மாணவனாக அவரிடம் கற்றறிந்தவைதான் அதிகம். அவருடைய எல்லா நூல் வெளியீடுகளிலும் அவருடன் கூட இருந்துள்ளேன். அவை ஒவ்வொன்றும் அவருடைய பாரிய பிரயத்தனங் களின் பின்னான வெளியீடுகளாகவே இருந்தன. தமிழிலே ஆழமான பற்றுக்கொண்டவர். மரபிலக்கியங்களிலும் நாட்டார் கலை மரபுகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவரது இந்த நூலுக்கு அறிமுக உரை எழுதக் கிடைத்தமை எனக்கு கிடைத்த பெரும்பேறு என்றே கருதுகின்றேன்.

கவிஞர் மு.சிங்கராயர் அவர்கள் கலைவளம் மிக்க யாழ்ப்பாணம், பாஷையூர்க் கிராமத்தில் பிறந்துவளர்ந்து தனது கிராமத்தின் கலைச் செழுமைகளை தனது பெற்றோர் உறவினர்களினூடாக கண்டறிந்தவர். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் முன்னாள் ஆயர் அமரர் வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் அதிபராக இருந்தகாலத்தில் அவரிடம் பயின்று அவரது ஊக்கத்தினாலும் தூண்டுதலினாலும் எழுதத் தொடங்கியவர். வித்துவான் ச.சி.ஞானப்பிரகாசம் பண்டிதர் செ.செல்வரத்தினம் வித்துவான் வேந்தனார் ஆகியோரிடம் தமிழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையாக கற்றுக்கொண்டவர். ஆசிரியராக, உப அதிபராக பசறை, புத்தளம், யாழ்ப்பாணம் போன்ற பல இடங்களிலும் 31 ஆண்டுகள் கல்விப் பணியாற்றி 1994இல் ஓய்வுபெற்றார். தனது இருபது வயதில் இருந்தே எழுதத் தொடங்கியவர். கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், கூத்து இசை நாடகம், ஆகிய துறைகள் அனைத்திலும் தடம் பதித்தவர்; ஈழத்தில் வெளிவந்த பாதுகாவலன், தினகரன், வீரகேசரி, ஈழமுரசு, உதயன், வலம்புரி போன்ற பெரும்பாலான பத்திரிகைகளிலும் சஞ்சிகை களிலும் தொடர்ச்சியாக எழுதிவந்தவர்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தியோகுப்பிள்ளை ஆண்டகை யின் தூண்டுதலால் நாடகம் எழுதத் தொடங்கியவர், கண்ணீர், அசோக மாலா, பொலினா, யூலியசீசர், எதுவாழ்வு என பல நாடகங்களை எழுதினார். இவர் எழுதிய 'காவலனின் காதலி' நாடகம் இலங்கை வானொலி நடத்திய போட்டியில் முதல்இடம் பெற்றது மட்டுமன்றி திரு 'சானா' அவர்களினால் தயாரித்து ஒலிபரப்பப்பட்டது. 1974இல் யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற தமிழாராட்சி மாநாட்டிலும் இவரது நாடகம் மேடையேற்றப்பட்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றது. அடுக்குமொழி யில் கவித்துவ ஓசைமிக்க சொல்லாடல்களைக் கொண்டு நாடகமாக்குவ தில் ஆற்றல் மிக்கவராக திகழ்ந்த அவரது நாடகங்கள் அவர் பணி யாற்றிய பாடசாலைகளிலும், அவரது கிராமத்திலும், ஆசிரியர் பயிற் சிக்கலாசாலையிலும் மேடையேற்றப்பட்டு பாராட்டுக்களைப் பெற்றன. பாசையூரில் 'தேனருவி நாடகமன்றம்' என்ற ஒன்றினை உருவாக்கி அதனூடாக பல உரைநடை நாடகங்களை மேடையேற்றினார்.

அது மட்டுமன்றி தனது கிராமத்தின் கலைப் பாரம்பரியமான கூத்துக்கலை அழிந்துவிடக்கூடிய சவாலான காலத்தில் அது பாதுகாக்கப் படவேண்டும் என்ற உணர்வினால் உந்தப்பெற்று "பாசையூர் நாட்டுக் கூத்து வளர்ச்சிக்கழகம்" என்ற அமைப்பினை உருவாக்கி அதனூடாக நேர்த்திமிக்க கூத்துக்கள் அரங்கேறுவதற்கு துணையாக நின்றதுடன் பாசையூரின் அடையாளமாகத் திகழ்ந்த புலவர் மிக்கோர் சிங்கத்தின் 'கண்டி அரசன்' நாட்டுக்கூத்தினை 1978ஆம் ஆண்டு பதிப்புச்செய்து வெளியிட்டார். பாசையூரின் முதல் பதிப்பு நூல் கண்டி அரசன். அதுமட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றி தனது கிராமத்தில் செந்தமிழ் கூத்துக்களையும், கவிதைகளையும் படைத்த கவிஞர்களை **'கூவிப்பறந்த கோகுலங்கள்'** என்ற நூலின் மூலமாக ஆவணப்படுத்தினார். எல்லாவற்றுக்கும் மேலாக **'பாசையூரும் நாட்டுக் கூத்தும்"** என்ற பெறுமதிமிக்க ஆய்வுநூலை எழுதி வெளியிட்டு தனது கிராமத்தின் கூத்துக் கலைமரபை ஆவணப்படுத்தியுள்ளார். அத்துடன் 'செம்மனத்தான்' என்ற புனித யுவானியாரின் வரலாற்றினை கொண்ட கூத்தினையும் எழுதி வெளியிட்டுள்ளார். இறுதியாக வீரத்தளபதி என புனித செபஸ்தியாரின் வரலாற்றினை கூத்தாக பாடினாலும் அது முழுமை பெறவில்லை என்பது துரதிஷ்டவசமானது.

இலக்கியத்துறையில், சிறுகதை, கவிதை, கட்டுரை என பலவற்றையும் எழுதியுள்ளார். தான் வாழ்ந்த காலத்தில் வாழும் சூழல் சார்ந்த யதார்த்தங்களை படம்பிடித்துக்காட்டிய அவரது பல சிறுகதைகள் அக்காலப் பத்திரிகைகளில் வெளிவந்தன. குறிப்பாக அவர் பணியாற்றிய பிரதேசங்களினதும், மாணவர்களினது கல்விப் பிரச்சனைகளினதும் வெளிப்பாடாக அவை வெளிவந்தன. இடப்பெயர்வின் காலத்தில் அவரது ஆவணங்களும் படைப்புக்களும் அழிந்தமை துன்பகரமானவை.

மரபுக்கவிதைகளை ஆக்கவல்ல கவிஞராய் தனது 20 வயதில் இருந்து எழுதிவருகின்ற கவிஞரின் கவிதைகள் பல பத்திரிகைகளிலும் வெளிவந்தன. யதார்த்த வாழ்வின் துயர்களை மரபுக்கவி வாகனத்தில் ஏற்றியவையாக அவை இருந்தன. பின்னர் குறிப்பாக கிறிஸ்தவத்திலே சிற்றிலக்கியங்கள் அதிகம் எழுதப்படவில்லை என்ற ஆதங்கத்துடன் கவிதைகளை எழுதத் தொடங்கியவர், **தூதுபோ தென்றலே** (தூது), **பாஷையூரானைப்பாடு** அவற்றினை நூல்களாகவும் வெளியிட்டார். **மடு அன்னை பிள்ளைத்தமிழ்** (பிள்ளைத்தமிழ்) **வியாகுல அன்னை வெண்பா** (வெண்பா) போன்ற கவிதை நூல்களை எழுதி வெளியிட்ட தனூடாக மிகச் சிறந்த கவிஞனாக தன்னை அடையாளப்படுத்தியது மட்டுமன்றி, கிறிஸ்தவ கவிதைப்புலத்திற்கும் வளம் சேர்த்து நிற்கின்றார். அவரது கவிதையாக்கத்தின் தொடர்ச்சியாக அவரது எட்டாவது நூலாக 'உயிராயுதம்' வெளிவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிராயுதம் அவரது வழமையான நூல்களில் இருந்து வேறு பட்டது. ஈழத்தமிழரின் துயரம் மிகுந்த நாட்களை மரபுக்கவிதை மூலமாக பதிவுசெய்கின்றார். தேவராசா, கண்மணி என்ற ஒரு குடும்பத்தின் சோகத்தினை சொல்வதனூடாக தமிழ்த்தேசம் அனுபவித்த துயரத்தின் வடுக்களை கவிஞர் தேன் தமிழ் சொற்களைக்கொண்டு தனது கவித்துவத்தினால் ஆக்கித் தந்துள்ளார். எமது மக்களின் வேதனை மிகுந்த வியாகுலத் தடங்களை அவை இனங்காட்டுகின்றன. அந்தவகை யில் எமது வரலாற்றோடு இணைந்து நிற்கும் இப்படைப்பு என்றும் பேசப் படும் என்று நம்புகிறேன்.

தற்பெருமை இன்றி, பெயர் புகழுக்காய் அலையாது அன்னைத் தமிழ் வாழ தன் வாழ்வையே அர்ப்பணித்துப் பணி செய்த கவிஞர், உடல் உள ஆரோக்கியத்துடன் நீடு வாழ இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

யோ.யோண்சன் ராஜ்குமார்
பிரதி இயக்குநனர்
திருமறைக்கலாமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

உயிராயுதம் எனது உயிரைப்பிழிந்து கொண்டிருந்த அவலச் சுமைக்கு கவி வடிவம் கொடுத்த நூல். 'கவிதை' என்பதை உள்ளுணர் வின் சொல்லோ. வியம்' என்பார்கள்; உணர்வுகளின் வெளிப்பாடு, அனுபவங்களின் பதிவு என்பார்கள். அந்தவகையில் இந்தக் கவிதை களும், இரத்தமும் சதையுமாய், மண்ணில் நடந்தேறிய பெருமனிதப் பேரவலத்தின் உணர்சிப்பதிவுகள்.

பல நூறு கவிதைகளை எனது வாழ்நாளில் நான் யாத்திருக்கின் றேன். அவற்றில் பெரும்பாலானவை எனது இறை உணர்வுடன் கூடிய வெளிப்பாடுகள் ஆனால் உயிரோவியம் எமது யதார்த்த வாழ்வியல் சோகத்திற்கு வடிகாலாக எழுதப்பட்டது. ஈழத்தமிழர்களின் முப்பதுவருட உயிரியல் போராட்டத்தின் எல்லாவிளைவுகளையும் முடிவுக்கு கொண்டு வந்த சொல்லில் அடங்காத சோகங்களின் களம்தான் முள்ளிவாய்க்கால். அந்த மனிதப் பேரவலத்தை எழுதுவதற்கு வார்த்தைகளுக்கு வலிமை இல்லை என்று தெரிந்தும் எழுதினேன். காரணம் அந்தப் பேரவலத்தின் சில வெட்டு முகங்களையாவது பதிவுசெய்யவேண்டியது அக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த எனது கடமை என்ற உள்ளுணர்வினால்,

புறநானூறு கலிங்கத்துப்பரணி என்றெல்லாம் எமது மூத்த தமிழ் குடிகள் காவியங்கள் வழியாக, போரையும், வாழ்வியல் சோகங்களை யும் தமிழர்களின் வீரத்தையும் ஆவணப்படுத்திவிட்டு சென்றனர். எமது காலத்தில் நாம் கண்ட துயரவரலாற்றை நாம் பதிவு செய்யவேண்டு மென்பது வரலாற்றுக்கடமை. பலரும் முள்ளிவாய்க்கால் சோகங்களை வெவ்வேறு வடிவங்களில் எழுதியுள்ளனர். ஆனால் மரபுக் கவிதைகளில் யாரும் படைக்கவில்லைப்போல் தெரிகின்றது. எனவே தான் எமது மரபுக்கவிதை வடிவங்களான விருத்தப்பாக்கள், அக வல்பாக்களால் இக் குறுங்காவியத்தினைப் பாடி முடித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை 2014ல் எழுதி முடித்தும் அச்சுவாகன மேறுவதற்கு பல்வேறு காரணங்களாலும் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. இதற்குப் பின் நான் எதையும் எழுத முடியுமோ தெரியவில்லை. வாழ்வின் அந்திமத்தில் நின்று இது வெளிவருவதனையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன். இதனை நூலாக்கவேண்டுமென்று முழு முயற்சி எடுத்த துணைவி யாருக்கும் பிள்ளைகளுக்கும் எனது நன்றியை தெரிவிப்பதுடன் இந் நூலுக்கு ஆசிஉரை தந்த அருட்திரு ம.ஜெறோ செல்வநாயகம் அடி களாருக்கும், வாழ்த்துரை தந்த பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்களுக் கும், அழகான முன்னுரை தந்த கவிஞர் கருணாகரன் அவர்களுக்கும், குறிப்புரை தந்த அருட்திரு.செ.அன்புராசா அடிகளாருக்கும், அறிமுக உரையை எழுதியது மட்டுமன்றி, இந்நூலாக்கச் செயற்பாட்டுக்கும் துணைநின்ற யோ.யோண்சன் ராஜ்குமார் அவர்களுக்கும், அட்டைப் படத்தை வரைந்து தந்த த.கபேஸ்சன் அவர்களுக்கும் மற்றும் இந் நூலாக்கத்திற்கு ஊக்கமளித்த எனது உறவினர்களான ஞா.இம்மானுவேல், ஞா.கிறிஸ்ரின் அவர்களுக்கும் அழகாக அச்சுப்பதிவினை மேற்கொண்ட மதிகலர்ஸ் நிறுவனத்துக்கும் எனது நன்றிகளை தெரிவித்து நிற் கின்றேன்.

'விதைத்தவன் உறங்கலாம் விதைகள் உறங்குவதில்லை' என் பதற்கெப்ப எனது எழுத்துவிதைகள் எமது துயரக் காலத்தின் சாட்சிகளாக இருக்கும் என்று நம்புகிறேன்.


நன்றி

மு.சிங்கராயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேவன் யேசு தாள்துதித்து...!

நீருண்ட நெடுங்கடல்தான் சூழ்ந்த உலகை
நிறைவாகப் படைத்தளித்துக் காக்கும் தூய
தாருண்ட மணங்கமழும் தேவன் யேசு
தாள் துதித்துக் கல்லாத மூடன் நானும்
போருண்ட வன்னிமண்ணின் முள்ளி வாய்க்கால்
புலம்புதுயர் கொடுமைதனைப் பாடும் வேளை
காருண்ட முகிலாகக் கண்ணீர் பொங்கக்
கூறிடவே துணிவுற்றேன் கேளும் ஐயா!

## சத்தியத்தின் திருவுருவே!

பத்திிடம் தேவபயம் மனிதன் வாழ்வில்
பெற்றுயரப் போதாது என்றே அறிவு
புத்திஞானம் விமரிசையும் கூடத் தந்து
பாவியைக்கை தூக்குதவ முதலே! உலகின்
எத்திக்கும் சூல் கொண்ட இருளை விலக்கி
ஒளியேற்றி வைத்த தூய ஆவி யான
சத்தியத்தின் திருவுருவே உனையே நம்பிச்
சிரம்பணிந்தேன் ஐயாவுன் அருளைத் தருவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்தியென்னைக் காப்பாய் அம்மா!

நந்தவன மல்லிகையே! வாசம் சுமந்து
நுழைந்ததென்றல்காற்றே! பொன்அணிகள்பொலியும்
சந்தமொடு சொல்லேந்திக் கவிதை பாடச்
சிறுமகனும்துணிந்துவிட்டேன்புலமைச்செருக்கில்!
எந்தவிதத் தவறுகளும் நேர்ந்து விடாமல்
என்கரத்தைப் பிடித்து வழி காட்டுதாயே!
செந்தமிழே! தாள்தொட்டு வணங்கி உன்னைச்
சரணடைந்தேன்! வாழ்த்தியென்னைக்காப்பாய் அம்மா!

## தந்தேனென் இதயத்தைத் தூக்கி...!

காற்றலைகள் புகழொலிக்கப் பூக்கள் சொரியக்
கடல்கொஞ்சும் பாசையூரில் கோயில் கொண்டு
வீற்றிருக்கும் அருள்வடிவே! தீயில் புழுப்போல்
வன்துயரால் கலங்கியழும் எளியேன் என்னைத்
தேற்றவுந்தன் பூம்பாதத் தாம ரைக்குத்
தந்தேனென் இதயத்தைத் தூக்கி! குமுறும்
ஆற்றிடையில் படகான என்னைக் காக்க
அந்தோனி! ஒருவரமே தாரு மையா!

## கருவறையில் சுமந்தவளே!

பத்துமாதம் கருவறையில் சுமந்து நொந்து
பட்ட துயர் மறந்தென்னைப் பெற்ற தாயே!
முத்தமழை நீபெய்தும் அழுத எனக்கு
முலையமுதம் தந்தவளே! மூத்த உறவே!
கத்துமலை கடலொருநாள் வற்றிப் போகும்!
கருணைபொங்கும் உந்தனன்பு வற்றா தம்மா!
எத்தனையோ முகம்நினைவில் தோன்றி மறையும்!
என்தமிழில் உனக்கென்றும் மரணம் இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - ஒன்று

# வன்னிமண்ணே! அன்னைவடிவே!

1. நன்னீரும் வழிந்தோடி நகர்ந்து செல்ல
நிலஞ்செழித்து நெல்மணிகள் வயலில் குலுங்கும்!
தன்னிலையில் முதிர்ந்தகைத் தொழில் ஓங்கத்
தமிழிளையோர் கூட்டமிங்கே நிமிர்ந்து உலவும்
கன்னியிளஞ் சிட்டுகளாய் நந்த வனத்தில்
கண்ணழகு மங்கையரால் தன்னை மறந்த
வன்னிமண்ணே! அன்புமழை பொழிந்த தாயே!
வாயார வாழ்த்துகின்றேன் உன்னை அம்மா!

2. பச்சையாடை போர்த்தாற் போல் பசும்புல் மஞ்சம்!
பழச்சுவைத்தேன் ஊற்றுகின்ற வாழைத் தோட்டம்!
இச்செகத்து வானைநீவிப் பறக்கும் புட்கள்
இருவிழிக்கு விருந்தளிக்கும்! வலிமை பெற்றுத்
துச்சமென வரும்பகையைத் தூக்கி எறியும்
திறல் வளர்த்தபெருங் கூட்டம்! வன்னி மண்ணின்
மிச்சமுள்ள வளங்களினைச் சொல்ல எனக்கு
மேலுமொரு நாவேண்டும் என்றால் பொய்யோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கஞ்சிக்கும் வழியின்றி அலையும் ஏழைக்
கூட்டமேங்கி வாழுமிந்தப் புவியின் மீது
பஞ்சமென்றால் பயிர்வளர்த்துத்தூற்றி எடுத்துப்
பலவீட்டுப் பசிப்பிணியை ஆற்றி மகிழ்ந்து
தஞ்சமளித் திட்டகொடைப் பண்பு டையோர்
தரணிக்கே புதியதொரு சரிதம் படைத்துக்
கொஞ்சுமிளம் பறவையினம் போல நாளும்
குலவிவாழும் மக்களையே இங்கு காண்பீர்!

4. நடைமெலிந்த மனிதரில்லை! வேடம் புனைந்த
நரிகளில்லை! உண்மைதோற்கப் பொய்யும் இல்லை!
குடைவிரித்து வஞ்சனையைக் கொட்டிப் பிறரைக்
கொல்லுமொரு பிறவிகளும் இல்லை! கொடிய
படைநடத்தி உயிர்களையே வேட்டை ஆடும்
பகையுணர்வும் இங்கில்லை! களிப்பு மட்டும்
மடைதிறந்த வெள்ளம் போல் எல்லோர் மனத்தும்
மனைகளிலும் நிலவிடுமே இன்ப வாழ்வு!

5. வண்டுவிழி மங்கையரை மலைத்தோள் படைத்த
வாலிபரை குறும்பாக மழலை பேசும்
நண்டுநடைச் சிறார்களையும் துணையாய் நிற்கும்
நல்லிதயப் பெற்றோரை மனித நேயம்
கொண்டுயரும் உறவுகளை ஆலம் விழுதாய்
முளைத்தெழுந்த சுற்றத்தைக் கண்ணால் இங்கு
கண்டுகொண்டேன்! இதுபோலும் ஏற்றம் மிகுந்த
குலச்சிறப்பை எப்படிநான் எடுத்துச் சொல்வேன்!

6. மறைநீதி பிறழாத மண்ணும் இதுவே!
மாரிமழை பொய்க்காத மண்ணும் இதுவே!
நிறைவான மனத்துடன் மக்கள் கூடி
நிம்மதியின் மூச்சுவிடும் மண்ணும் இதுவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையொன்றும் இல்லாத உறவில் மகிழ்ந்து
கொத்துமலர் போலு மெங்கள் குடும்பம் பிரிவைச்
சிறைவாழ்க்கை என்றெண்ணும் மண்ணும் இதுவே!
சந்தனம்போல் மணம்பரப்பும் மண்ணும் இதுவே!

7. தரைதடவும் கலப்பைமுனை நிலத்தைக் கீறத்
தங்கநெல்லின் மணிகுலுங்கும்! வாயால் கொறிக்க
இரைதடவும் புள்ளினங்கள் இனிய ராகம்
இசைப்பதையும் இருவிழியால் பார்த்தால் மனதின்
கரைதடவும் மகிழ்ச்சியலை பிரவ கிக்கும்!
கவிதைக்கு அழகூட்டும் உவமை தேடி
உரைதடவும் படிநடந்தேன்! மோன நிலையின்
இனியசுகம் வேண்டாதார் எங்கி ருப்பார்!

8. இன்னிசையைக் குழைத்துவரும் குயிலோர் பக்கம்
உணர்வுகிள்ளும் இளந்தென்றல் மற்றோர் பக்கம்
மண்ணுயிர்கள் குலவுகின்ற முகப்போர் பக்கம்
மாநிலமே கண்டிராத மாண்போர் பக்கம்
தொன்மைமிகு நாகரிகந் தழைத்தோர் பக்கம்
தேன்பிழியும் கவிபுனைந்த நூலோர் பக்கம்
புன்னகையே மலர்கள்போல் பூத்துச் சொரியப்
புகழுமிந்த மண்ணுக்கு இணையும் உண்டோ!

9. சோலையிலே மலருகின்ற பூவின் தேனில்
சொக்கியதில் மயங்கிவிழும் வண்டு! அதனை
மாலையிலே துயிலெழுப்ப வருடும் தென்றல்!
மந்திகளோ செழுங்கனிகள் பறித்து உண்ணும்!
காலையிலே கீழ்த்திசையைச் சிவக்க வைக்கும்
கதிரவனின் முகங்கண்டால் கமலம் சிரிக்கும்
பாலைப் போல் ஒளிசிந்தும் நிலவைக் கண்டு
பனியிதழை அல்லிப்பூ மெல்ல விரிக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பாய்கின்ற ஆறுகளோ பசுமை செய்யப்
பாற்சோறு உண்டுமக்கள் மகிழ அணைக்கும்
தாய்போல மடிவிரித்த வன்னி மண்ணின்
தாமரைப்பூங் காலடியைத் தலையில் வைத்தோம்!
மாய்கின்ற இவ்வுடலும் சாகும் உயிரும்
மங்காத புகழ்வன்னித் தாய்க்கே சொந்தம்!
ஆய்கின்ற கவிதைக்கு மோனைப் பொருளாய்
அரங்கினிலே வீற்றிருக்கும் தாய்நீ வாழ்க!

11. ஓயாத சுதந்திரப்பூங் காற்றை வாங்கி
ஓங்குபுகழ் வளர்த்திட்ட வன்னி மண்ணே!
காயாத பூவனமும் ஊஞ்சல் ஆடும்
கழனிகளும் குலுங்கும்பொன் மகளே! உந்தன்
சாயாத அழகிலெனை மறந்தேன் அம்மா!
சீர்பெருக்கும் அருவியாற்றில் நீந்தி மகிழும்
தாயாக இருப்பவளே! தமிழால் போற்றித்
தலைதாழ்த்தி வணங்குகின்றேன் வாழ்க! வாழ்க!

12. வீங்குபுனல் மூங்கிலாறு வளமே கூட்ட
வட்டுவாகல் முள்ளிவாய்க்கால் குடியிருப்பு
தூங்கிவிழும் அழகூர்கள் பெருமை பேசத்
தமிழுக்கே பஞ்சமென்றால் எதனால் சொல்ல!
மாங்குயிலும் கிளிகளுடன் மயிலும் மானும்
மகிழ்ந்துவாழும் வீடிதற்கு இணையும் உண்டோ!
பூங்கவிதை பாடிவரும் தென்றல் காற்று
பட்டுடலை வருடுகின்ற சுகமே அழகு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - இரண்டு

## சோலையிலே புகுந்த சூறாவளி !

01 கிழக்குவானம் வெளுத்துவர உதயப் பொழுதும்
குருதிவண்ண முகங்காட்ட நெஞ்சு பதைக்கும்
முழக்கமொன்று காதுகளைக் கிழித்து உலுப்ப
மருண்டவிழிப் பிள்ளைகளைத் தந்தை நோக்கி
வழக்கமாகக் கேட்கின்ற சத்தம் தானே !
வாடாபொன் குஞ்சுவேலை முடிப்போம் என்றார்!
அழுது கொண்டே அங்குவந்த தாயும் சொன்னாள்
இல்லையிது, வீடெங்கும் நிறைந்த மௌனம்!

02 கூவிவரும் எறிகணைகள் காதைப் பிளக்க
குமுறுமிடி கேட்டநாகம் போல அவளும்
பூவிழந்த கருமேகக் கூந்தல் விரித்துப்
பயத்தினால் உடல்வியர்த்துக் கொட்ட மகனும்
தாவிவந்து தாய்மடியில் முகத்தைப் புதைக்க
துன்பத்தின் சுமையாலே இதயம் நொந்து
ஆவிநீத்த கூடானான் அன்புத் தந்தை !
ஆகொடுமைத் துயரத்தை அளக்க லாமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. தீவண்ண எறிகணைகள் பாய்ந்து வந்த
திசைநோக்கி பார்த்தபின்பு தாயும் அங்கே
பூவண்ண முகம்படைத்த பிள்ளை ஏங்கிப்
பதைபதைத்துக் கதறியழ நெஞ்சு கலங்கிச்
சாவண்ணக் களம்விட்டே இரண்டு காலும்
செல்லுகின்ற பாதையிலே செல்லு கின்றார்!
நாவண்ணத் தமிழ்குழைத்துச் சேதி சொல்வேன்!
நாளுமொரு துயர் வளர்ந்த கதையைக் கேளும்!

4. மதிகெட்டு நீதிகெட்டு ஆடு கின்ற
மூடர்கள் வெறிக்கூத்தின் முடிவு என்ன?
விதியென்று சொல்லலாமோ! மூண்டெழுந்து
விகர்சித்த பகைத்தீயோ! மண்ணைக் கிளறும்
நதிகளெல்லாம் கடலைநாடிச் சேர்வது போல
நினைவெல்லாம ஒன்றாகி நேர்ந்த அவலம்
குதித்தோட வைத்ததனை எண்ணி எண்ணிக்
குடும்பம்தான் அலைமோதிக் கிடந்த தம்மா

5. குயிற் கூட்டம் மௌனித்து குளிர்ந்த நீரின்
கையணைப்பில் தாமரைப்பூ துயிலும் நேரம்
மயிலிறகு நிறங்காட்டும் மாலை வானில்
மணிக்குலமாய் தாரகைகள் மினுங்கும் வேளை !
வெயில் தடவும் தரைக்கிதமாய் தென்றல் வீச
வெள்ளைநிலா கீழ்வானை அலங்க ரிக்க
அயலொருவர் அறியாமல் பயணித் தாரே!
அந்தநீண்ட பயணத்தின் முடிவு எங்கே?

6. கொப்புளித்த காலடிகள் நோக நடந்தால்
குடல்கருகும் பசிவாட்டும்! இரவுக் காலம்
துப்புகின்ற கொடும்பனியும் கொல்லு தையோ!
தூரத்தே மின்னுகின்ற விளக்கின் ஒளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்புகின்ற இருள்கலைந்து மயங்கு தம்மா!
கண்களிலே புரியாத ஏக்கம்! உடலைத்
தெப்பம்போல் வியர்வையோடி நெஞ்சை நனைக்கத்
தெரிகின்ற இடத்தில்தாய் ஆறி அமர்ந்தாள்!

7. இதயத்தைத் துன்பத்தில் மிதக்க விட்டால்
இராப்பொழுதில் கண்ணுறக்கம் கொள்ள வருமா!
இதுவரைக்கும் வழியினிலே பட்ட அவலம்
அப்பப்பா! போதுமென்பாள் தாயும்! காணாப்
புதுக்கதைதான் தொடருதையா! இங்கு நாங்கள்
படுந்துயரம் தீருமென்று சொன்னார் தந்தை!
உதயத்தை தரவுங்கீழ் வானம் சிவந்து
உதித்துவந்த சூரியனும் எட்டிப் பார்த்தான்!

8. வெம்புமன ஆசைகளைச் நெஞ்சில் சுமந்தால்
வேரறுந்த கொடியாகும் வாழ்க்கை ! மரத்துக்
கொம்பினிலே மணம்பரப்ப விரிந்த மலரின்
கூத்தாட்டம் ஒருமுறைதான்! இடர்கள் மலிந்த
அம்புவியில் நிம்மதியைத் தேடித் தேடி
அலைகின்றோம்! எங்குசென்று காண்போம்! நெஞ்சத்
தெம்பிழந்து அஞ்சிவாழும் வாழ்வு எதற்கு?
தன்மானம் இழந்துவிட்டால் பின்பேன் வாழ்க்கை!

9. கடல்வளந்தான் செழித்தவோர்மண் மூன்றாம் பிட்டி !
கிராமத்தை விட்டகன்று கிளிநொச் சிக்குப்
படைதுரத்த ஓடிவந்து ஆட்டு மந்தை
போலுறவை இங்குகண்டோம் ! விழிகள் மட்டும்
விடைகூற மௌனித்த வாயின் இதழ்கள்
விலகவில்லை கால்வலிக்க நீண்ட தூரம்
நடைநடந்தோம்! நமக்கு மொரு விடிவு காலம்
நேராதோ எனவதனி சென்னாள் கலங்கி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஏவுகணை புயலாக வாரி அழித்த
உயிர்த்தொகையின் கணக்கென்ன? சுழலும் காற்று
தூவுகின்ற சருகுகள்போல் மண்ணில் புதைந்து
துடிப்பவர்கள் யார்யாரோ? மேலும் கொடிய
சாவினிலும் உறவுசொல்லி அழுவா ரில்லை!
சொத்தழிவு நெருடலினால் தவிப்பார் எவரோ?
நாவுலர்ந்து மயங்கிவிழும் மனிதப் புழுக்கள்
நாதியற்று வாடுவதைப் பாராய் உலகே!

11. தும்பிகூடி இசைவடித்த சோலை இன்று
துயர்க்காடாய் மாறியதே! பேயும் அஞ்சும்
கும்மிருட்டில பிணத்திலேறிக் கடந்து வந்தோம்!
கூகையொலி கேட்குதிங்கே! விரைவாய் செல்வோம்
தம்பிவாடா தந்தையோடு தங்கை சேர்ந்து
தாயருகே என்றுசொல்லிக் கையைப் பிசைந்து
நம்பிக்கை கருகிவிட்ட நினைவு சுமந்து
நாதியற்ற கண்மணியும் நிலத்தில் அமர்ந்தாள்!

12 கண்ணுறங்க முடிந்திடுமோ நெருஞ்சி முள்ளுக்
குத்துகின்ற படுக்கையிலே! மானம் உள்ள
பெண்ணுறக்கம் கொள்வாளோ மாற்றான் கையில்!
போர்தந்த வலிமாறி எங்கள் ஈழ
மண்ணுறங்கி வாழுயிரைச் சுட்ட புண்ணை
மயிலிறாகால் வருடுவோர்க்கா வலியும் புரியும்?
விண்ணுறங்கும் இருள்மயங்கிக் கிழக்கு வானில்
விடிவெள்ளி முளைத்ததம்மா! விடியல் காட்ட!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - மூன்று

# மூங்கில் மரக்கானகத்தில் மூண்டுவிட்ட தீ!

1. தோட்டங்கள் வயல்வெளிகள் பச்சை வண்ணத்
தங்கவைரத் தோப்புக்களும் தீயில் கருகக்
கோட்டைமதில் பிளந்தெறியும் குண்டின் முன்னால்
குடிசைகளின் நிலையென்ன? செங்கோல் பிழைத்த
நாட்டினிலே செத்ததுவோ சிறைக்குள் நீதி!
நினைக்காத பிணவாடை அழுகு ரலையும்
கேட்டுநெஞ்சே வெந்துபோகத் துடித்த எங்கள்
காதுகளில் வேறெந்த ஒலியும் இல்லை!

2. மண்ணுலகில் மக்களையே வாழ வைத்து
மடியினிலும் தோளினிலும் கிடத்தி வளர்த்த
கண்ணிறைந்த கிளிநொச்சி தன்னை விட்டு
காலாறி முரசுமோட்டை வந்த வேளை
விண்ணதிர மின்னலிடி மழையும் பொழிந்து
வேரோடு மரம்வீழ்ந்து அங்கே அருகில்
உண்ணாமல் உறங்காமல் களைத்து இளைத்து
உடல்மெலிந்து அனைவருமே ஓய்ந்து இருந்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அருள்வறுமை இல்லாமல் கருணை நிலவ
அன்புதானே கொலுவேறி ஆள வேண்டும்!
இருள்வறுமை உலகத்தில் கலைந்து விடிய
ஆதவனின் ஒளிப்பிச்சை வேண்டும்! சூழும்
பொருள்வறுமை நீங்கியிங்கு வாழ்வு காண
போரொடுங்கி அமைதியுற வேண்டும்! பொய்யால்
உருட்டுகின்ற விழிபடைத்த மனித னாலே
உலகமென்று அமைதிகொள்ளும் சொல்வீர் ஐயா!

4. முரசுமோட்டை ஊரினிலே தங்கி யிருந்து
மௌனித்த தேவராசா குடும்பம் கருக்கல்
இரவுநேர இழுபறியில் உணவை உண்டு
எந்தநாளும் தூங்காத விழிகள் மூடி
வருகின்ற வைகறையில் காகம் கரைந்து
வெளுத்துநிலம் தெரிந்தவேளை அன்பு மகனை
அருவமொன்று தீண்டிவிட்ட அவலம் கண்டு
அப்பனுடன் கண்மணியும் கதறி அழுதாள்!

5. நஞ்சரவு தீண்டியதால் பிணமாய்க் காட்டு
நிலத்தினிலே கிடந்தவனைக் கண்ட தாயும்
நெஞ்சந்தான் புண்ணாகி, மகனே! உயிரே!
நான்பத்து மாதங்கள் சுமந்து பெற்ற
செஞ்சாந்தின் பொற்சிமிழே! ஐயா? உந்தன்
சோதிநிலா முகவழகை என்று காண்பேன்!
வஞ்சகமாய்ச் சாவு உன்னைப் பறித்தென் கண்ணை
விட்டகலச் செய்தவிந்தை அறியேன்! மகனே!

6. சிந்தைவாடிச் கனக்குதையா! சிவந்த அழகுச்
சித்திரப்பூ மேனியினைக் காணாதுருகும்
தந்தைமுகம் பாரடாநீ! முத்தே! உந்தன்
தாமரைப்பூ முகவிழியேன் திறக்க வில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

288444

நொந்துபெற்ற என்வயிறும் எரியுதையோ!
நீயெந்தன் பக்கமிருக்கும் நாளும் வராதோ?
வெந்தீயில் பூவுடலும் கருகும் இந்த
வேதனையைக் குலக்கொழுந்தே! தாங்குவோமா?

7. இப்படியே கண்மணியும் அவ்வி டத்தை
இழவுவீடு ஆக்கிவிட்ட நிலையில் கிழக்கே
கப்பியிருந்த இருள்கலைந்து மண்ணும் வெளுக்க
கணவனையும் அணைத்துவிம்மி விம்மி அழுதாள்!
எப்படியோ மகிழ்ச்சியுடன் தொடர்ந்த வாழ்வு
எத்தனையோ பிரளயங்கள் சூழ்ந்த கதையாய்க்
கொப்புளித்த துயரங்கள் நெஞ்சை அறுக்கக்
குலவிளக்கின் முகவழகைக் கண்ணால் விழுங்கி

8. விழிமழையில் கண்மணியும் நனைந்த போது
விண்ணதிர எறிகணையும் கூவி வந்து
வழியருகே வீழ்ந்துமண்ணைக் கீறிப் பிளக்க
வாஞ்சையுடன் மகனையள்ளி முத்தம் கொடுத்து
இழிகுணத்து விலங்குகளால் தளிரின் வாழ்வு
உருக்குலைந்து போனதென்று தடியைக் கொண்டு
குழிபறித்துத் தன்னுயிரை அதற்குள் வைத்துக்
கையால் மண் சருகுகொட்டி மூடி விட்டாள்!

13962

9. செவ்வானக் கலவைகொட்டி வண்ணம் காட்டும்
செங்குருதி வெள்ளம்போல் புரண்டு பாய்ந்து
இவ்வேளை வன்னிமண்ணின் திசைகள் தோறும்
ஈரமாக்கி விட்டதையோ! காதில் கேட்ட
அவ்வோசை பிழிந்தஎறி கணைகள் மரத்தை
அடியோடு வீழ்த்தஈனர் தேளின் கொடுக்கு
கவ்வாமல் கலங்காமல் வாழ்வு தொடரக்
கடவுள்தான் துணைபுரிய வேண்டும் அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. அக்காலப் போர்வெறியால் தூளாய்ச் சிதறி
உடைந்தபோன வாழ்வுமொரு வாழ்வா? நசிந்து
சக்கையான ஆசைகளும் நிறைவு பெறுமா?
சாவெனும் பேய்க்கரத்தில் சரணா கதியா?
மக்களென்ன ஆட்டுமந்தைக் கூட்டம் போல
மடியபூமிப் பந்தினிலே தேவைப்படுமா
துக்கராகம் எனக்கேட்டுத் தேவராசா
துணைவியோடு மற்றோரும் மனமும் பதைத்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - நான்கு

# எழுதா விதியோ!

1. தேவை கண்டா பயணித்தோம்!
துடியாய்த் துடித்து இங்குவந்தோம்!
நாவை இழந்து நமதுரிமை
நிலத்தைத் துறந்து நடைப்பிணமாய்
சாவை நேரில் சந்தித்தோம்!
சரிதம் காணாப் பீடையிந்தத்
தீவைப் பிடித்து உலுக்கவொரு
தருணம் வந்து வாய்த்ததுவோ!

2 தின்னச் சோறு இல்லையாறித்
தங்கி வாழ நிழலுமில்லை!
முன்னர் கண்ட சுகவாழ்வும்
மெல்லக் கனவாய் செத்ததுவே!
இன்னும் நம்மை தொட்டதுன்பம்
எழுதா விதியோ! என வதனி
சொன்ன வார்த்தை கேட்டுமற்றோர்
சோர்ந்து மனமுஞ் சலித்தனரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சிந்தை கலங்கித் துடிக்குதையா!
சிறகு ஒடிந்த பறவைபோல
தந்தை தாயைக் காண்போமா
தொட்டு வளர்த்த உறவுகளை
எந்த நாளில் அணைத்திடுவோம !
இனிமேல் எங்கள் உயிரனைத்தும்
விந்தை யான உலகினிலே
வாழும் வகையை நாமறியோம்!

4. உழுத வயலைக் கடல் மீது
ஓடும் படகைக் கட்டிமுடித்துத்
தொழுத வீட்டைக் கனவுகளைத்
தந்த இனிய உறக்கத்தை
முழுதும் இழந்து பட்டழிந்த
மரம் போல் வாழ்வு முடிந்ததையோ !
அழுதும் என்ன ஆகுமடா!
அகதி தானே நாங்களினி!

5. விண்ணில் நுழைந்த வெடியுமந்த
வேளை வந்து பாய்ந்திடவே
மண்ணைப் பிளந்து பெருங்குழியை
மனமுந் துடிக்கக் கண்டதினால்
கண்ணில் நீரும் அலை மோதக்
கால்கள் நகர்த்த முடியவில்லை!
புண்ணில் வேலாய்ச் சொருகிடவே
புலம்பு கின்றோம் ஆற்றாது!

6. வெட்டும் மின்னல் போலவொரு
வீச்சில் உலுக்கும் கணைபட்டுக்
கொட்டும் குருதி தனில்குளிக்கும்
கொடிய அரக்கர் வெறியோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டும் தொலைவு தூரத்தில்
உலகின் செவிக்குக் கேட்கலையோ ?
சிட்டும் சிறகை இழந்த பின்னே
சுற்றி வானில் பறந்திடுமோ?

7. முத்தம் சொரியத் தொடுவானை
மூசும் கடலும் பிடித்தணைக்கப்
புத்தம் புதிய பூமிகாணப்
பயணம்செய்யப் புறப்பட்டோம்!
சத்தம் காதைப் பிளந்தெறியச்
சுற்றும் விழிகள் சுழன்றுவரப்
பித்தம் முற்றி விட்டவர்போல
பிறவி எடுத்துப் புலம்பினரே!

8. பிஞ்சு பூக்கள் காயென்று
பொறாமைத் தீயில் எரிந்ததனால்
நெஞ்சு குமுறி வெடிக்குதையோ!
நிட்டூ ரத்தைச் சொல்லலாமோ?
குஞ்சு காக்கும் வேளையிலே
கோழி பருந்தை எதிர்த்தெழுமே!
அஞ்சு கின்றோம் ஆண்டவனே!
அவலம் தீர்த்து ஆளுமையா!

9. துன்பம் பலவும் ஒன்று கூடித்
தொடர்ந்து வந்து போகுமென்பார்!
இன்பம் கனவாய் மாறியதால்
உறவும் பறந்து போயிற்றே!
அன்பு துணையாய் வாழ்ந்தவர்கள்
அலைந்து திசைக்கு ஒன்றானார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு ஊழிக் காலத்தில்
மூண்ட சாபம் இதுதானோ!

10. தாலி இட்ட மணவாளன்
தோளில் சுமந்த எம்வாழ்வு
வேலியில்லா விளைநிலம்போல்
வீழ்ந்து கிடக்க விதியுமாச்சோ!
போலி உலகக் காட்சிகளில்
பேசும் உண்மை ஒன்றுண்டா?
கூலி பேசி மாரடிக்கும்
கூட்டம் இங்கே வாழுதம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
10 DEC 2022
யாழ்ப்பாணம்

# செங்குருதி கழுவிய தங்கப்பூமி

ஏங்கியேங்கிக் கண்மணியும் விம்மி அழுது
இதுதானோ ஏழைவாழ்வு என்றாள் அவனோ
மூங்கிலிலைப் பனித்துளிபோல் தயங்கித் தயங்கி
முன்விழுந்து மூண்டெரியும் கணையைப் பார்த்தான்!
தூங்கியதன் குழந்தையை வாரி எடுத்துத்
தோளினிலிலே போட்டணைத்துப் பாடக் குண்டை
தாங்குவதற்குப் பதுங்குகுழி பறிக்க மரத்தின்
தடிகொண்டு பூர்த்தியாக்கிப் புகுந்தார் அதனுள்!

பதுங்குகுழி உள் சென்றோர் வலிமை இழந்து
பசிமறந்து புலம்பியழச் சக்தி அற்று
இதுவுமெங்கள் தலைவிதியோ என்று தாயும்
இடிந்துமனம் பேதலித்துத் திகைத்து நின்றாள்
பிதுங்குவிழி மடலசைத்து உலகை அளக்கும்
பால்மணந்தான் மாறாத குழந்தை தானும்
மெதுவாக முகம்பார்த்து முனகி நிற்க
மீளவொரு எறிகணையின் உறுமல் கேட்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடியோடிக் களைத்தவரின் கணக்கு என்ன?
உயிர்பிரிந்த மனிதமந்தைத் தொகையும் என்ன?
மூடிமூடி மண்ணுக்குள்ளே புதைத்து விட்டு
முகம்கூடப் பார்த்தறியாச் சோகம் என்ன?
வாடிவாடி விழுந்தெழும்பும் முதுமைக் கால
வயோதிபரின் வகைத்தொகையை யாரோ அறிவர்?
தேடிநாடி உறவுகளைப் பார்க்கக் கண்கள்
தெரியாதே என்றலையும் குருடர் கூட்டம்!

4. பசிகுடலை அறுத்தாலும் தொண்டை நாவைப்
பெருந்தாகம் உலர்த்தினாலும் கண்ணில் தூக்கம்
நிசிகடந்த வேளைவரை மறுக்கும் வானில்
நினைவெல்லாம் சிறகுகட்டிப் பறக்க எண்ணும்
பொசியுமன நெருடலதை வெறுக்கும்! குழியில்
பொறுத்திருக்க முடியாமல் மடைதான் திறந்து
கசிகின்ற விழிக்குளங்கள் பொங்கி வழிந்து
காண்போரை நெஞ்சுருகச் செய்த தம்மா!

5. பூக்களோடு இளங்கொடிகள் மொட்டு கனிகள்
பிஞ்சுகளும் உதிருகின்ற சருகு இலைகள்
மாக்களோடு பறவைகளும் ஊரும் பூச்சி
மண்புழுக்கள் நெல்மணிகள் யாவும் குண்டால்
தீக்குளித்துப் பற்றியெரிந்து சாம்பல் மேடாய்
தெரிகின்ற இடமெல்லாம் புகையாய் மாறித்
தூக்கியெடுக்கத் துரும்புமில்லை ஒன்றும் இல்லை
தாயகமண் தீப்பிழம்பாய் சிதைந்த கோலம்!

6. பிள்ளைகளோ உணவின்றி மயங்கிச் சோர்ந்து
பசிப்பிணியால் வாடியதைக் கண்ட தாயும்
கொள்ளையில போவாங்கள் எங்கள்குலத்தைக்
குருத்தோடு நுள்ளியெடுத்துச் சாய்க்க எண்ணும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ளநரித் தந்திரத்தின் விளைவோ இதுதான்!
கூண்டோடு அழிகின்றோம்! எம்மைக் காக்க
நள்ளிரவில் யார்வருவார்? அநீதி கண்டு
நீதிக்குக் குரல்கொடுப்போர் யாரோ என்றாள்!

7. பூக்காட்டில் தென்றல் தான் நுழைய வேண்டும்!
புதுமலரை வண்டு சுற்றிப் பறக்க வேண்டும்
தீக்காடு எரிந்தால்மாங் கனியா கொடியா
தங்கவயல் காடென்றும் பார்ப்பதில்லை!
நோக்காடு இத்தனையும் போதும் ஐயா!
நொந்துபெற்று எடுத்தபாழும் வயிறும் எரியும்
சாக்காட்டில் துயர்நெருப்பில் மக்கள் துடிக்கச்
சமாதானம் பேசிடுவோர் எங்கே என்றாள்!

8. கண்பட்ட இடமெல்லாம் விம்மும் ஒலியும்
குற்றுயிராய்க் கிடப்போரின் முனகல்! நெஞ்சு
புண்பட்டுத் தாளாமல் கலங்கு தையோ!
பிள்ளைகளின் அழுகுரலும் எப்போ தடங்கும்?
விண்தொட்ட மேகங்கள் பொருதும் மின்னல்
வீச்சினைப்போல் எறிகணைகள் அருகில் வீழ்ந்தால்
மண்பட்டு அழிகின்ற உடலைக் கொண்ட
மனிதவாழ்வு ஆறுவது யாரி டத்தில்?

9. வாழ்வூற்றைத் தன்வயிற்றில் சுமந்து பெற்ற
வரம்மிகுந்த மரியாயே! அருளைத் தந்து
தாழ்வகற்றும் மருதமடுத் தாயே! காட்டில்
திசைமாறித் தவிக்கின்ற மாக்கள் போலப்
பாழ்பட்ட நரகவாழ்வு இனியும் நமக்குப்
பாரமாகச் சுமையாக இருக்க விதியோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ந்து விட்டோம் உன்னடியில்! கடைக்கண் பார்வை
வீசியுந்தன் பிள்ளைகளைப் பாரும் அம்மா!

10. கீறுபட்டு மேனியெல்லாம் தளர்ந்து போகக்
கொடிமலராய் வேலியற்று நிற்கின் றோமே?
மாறுபட்டு உருத்தெரியா உடல்கள் இங்கே
மண்ணுக்குள் புதையுண்ட கொடுமை என்ன?
நீறுபூத்த நெருப்பாகிக் கனலும் எங்கள்
நெஞ்சமெலாம் வேகுதையோ! போதும்! இனிமேல்
வீறுகொண்டு எழுந்து நின்று எங்கள் பகையை
வெற்றிகொள்ள நிச்சயமாய் ஒருநாள் வருமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - ஆறு

# உதிரச் சேற்றில் புதைந்த உயிர்கள்!

1. வன்னியில் உள்ள ஓரூராம் மக்கள்
வளமாய் வாழ்ந்த புதுக்குடியிருப்பைத்
தின்னும் யுத்தக் கொடுமை தன்னால்
தூரமுள்ள நந்திக் கடலை
இன்றுகாலைப் பொழுதில் இவர்கள் அடைந்து
ஏங்கியே மூச்சை விட்டவாறு
தன்னுயிர் பிள்ளைகள் மனைவியுடனே
தேவராசா வந்து விட்டான்!

2. மழைக்கால ஆறுகளின் நன்னீர்த் தொகுப்பு
மயங்கவைக்கும் நந்திக் கடலே
தளராத உறுதியுடன் அந்தக் குடும்பம்
தயங்காமல் வந்த மறுவிநாடி
குழறியழ விமானக் குண்டு வீச்சு
குறித்த பகுதியில் வீழ்ந்தது!
வழங்குமொரு காயலென்ற பேருடன் விளங்கும்
வண்ணக் கடல்துள்ளி எழுந்ததே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஊர்ந்துநிலம் அளக்கும் நத்தைகள் ஆயிரமாய்
இருப்பதனால் நந்திக் கடலாச்சு!
சோர்ந்துபோய் மரநிழலின் மடியில் இருந்து
சோகக் கதைகளைச் சொல்லியாற
வேர்வைநீர் குளமாகி உடலை நனைக்க
வாரியடிக்கும் வடகாற்றில் அதுவுலர
நேர்ந்துவிட்ட கொடிய பூகம்ப வாழ்வை
நினைந்தழ முடியாமல் தேம்பினரே!

4. பெருங்குடலை சிறுகுடல் தின்னுவது போலப்
பசிமுகத்தில் அனைவருக்கும் தெரிந்தது!
வரும்போது வாங்கிவந்த காய்ந்த பாணையும்
வதங்கிய வாழைப் பழத்தையும்
அருமையான குழந்தை அதனை வாயிலிட்டு
ஆற்றியதே கோரப் பசியை!
ஒருவருடன் ஒருவர் பேச நினைத்தவேளை
அந்திப் பொழுதும் வந்ததே!

5. சொந்தமண் தொடர்பான சோக நினைவுச்
சுழியில் இருந்தெழுந்து விடுபட
எந்தவொரு மனித உயிராலும் முடியவில்லை!
இரவுவேளை வந்து விட்டாலோ
வந்தவரில் எவரை நாம் இழக்கப் போகிறோம்!
விடிந்தால் தெரிந்துவிடும் முடிவு!
இந்த வில்லங்கம் தானோ எமக்கவனால்
எழுதப் பெற்ற தலையெழுத்தோ!

6. பொழுதினுக்குப் பூபாளம் பாடும் குருவிகள்
போடுகின்ற சத்தத்தை அடக்கியாரோ
அழுகின்ற பேரொலி காற்றில் கலந்து
அயலவரைக் கூட்டியது அங்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்து விழுந்து புரண்டழுதாள் கண்மணி!
விஷமேறி அருளும் செத்ததனால்
புழுவாகத் துடித்தாள் பாம்பு கடித்திந்தப்
பரிதாபம் வந்து நேர்ந்ததே!

7. நேற்றிருந்த அருமைக் குழந்தையும் பிரிந்து
நெடும்பயணம் போவதற்கு வேளை வந்து
காற்றடங்கிப் போயிற்றே உடலெனும் கூடு!
காலத்தின் விளையாட்டை யாரறிவார்?
ஆற்றிடாமல் அழுது விழி சிவந்த கண்மணிக்கு
ஆறுதல் சொல்ல யாருளரோ!
தேற்றிடவும் எமக்கு நெஞ்சத் துணிவுண்டோ?
தாரணியின் நிகழ்வுகளே இதுதானம்மா!

8. வேடுவன்கை அகப்பட்ட பறவை போல
விம்மித் துடிப்பதுதான் வாழ்வா?
காடுமேடு அலைந்து கண்ணொளி மங்கிக்
காலிரண்டும் நடந்து வலிக்கிறதே!
பாடுகள் எத்தனையோ! மனமும் ஏங்கிப்
பட்டதுயர் கொஞ்சமோ இறைவா!
தேடுமந்த நிம்மதியைத் தந்து எம்மைத்
தேற்றிட மாட்டாயோ தலைவா!

9. வேருறிஞ்சும் நீரால்தான் விருட்சம் செழித்து
வளருமே இந்தத் தரையின் மேல்!
நாரறுந்து பூக்கள் மாலையாக எந்த
நாளிலும் கட்டப் படுமோ?
பார்மீது வன்முறையில் மக்கள் சிக்கிப்
படுந்துயரம் இனிமேலும் போதாதோ?
ஊர்கூடி நலமாக வாழ்ந்த இந்நிலையில்
ஏனிந்தப் பிரளயமோ நானறியேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
288444

10. புலம்பலொலி ஓயவில்லை! கண்ணீரும் வற்றவில்லை
பிணவாடை கலையவில்லை! மக்கள்
குலம்வாழ மார்க்கம் தெரியவில்லை!
கண்ணுறங்க வேளை இல்லை!
பலம்படைத்த வீணர் மட்டும் வாழ்ந்திருக்கப்
பஞ்சைகளின் வயிறுபற்றி எரிகிறதே!
நிலம்மீது நெருக்கு வாரங்கள் தொலைந்து
நிறைவைஎந்நாள் காண்பதென்றாள் கண்மணி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - ஏழு

# அவலமும் துன்பமும் அழுகுரலும்

1. எக்கணமும் காற்றில் அசையும் விளக்குப் போல்
மக்கள் பசியால் செத்தொழியும் நிலையையெண்ணி
தேவராசா கண்மணி கலக்கம் கொள்ள
சீவ மரணப் போராட்டம் கொஞ்சநேரம்
கடந்து தொடங்கும் என்று நினைத்து
நடந்த களைப்பினால் ஆற எண்ணினர்!
எதிர்பார்த்த நிகழ்வாக பொல்லாத பசி வயிற்றில்
கொதித்தெழுந்து பிள்ளையைக் குதறியதே அம்மா!
மகளாம் வதனியின் வாடிய முகத்தில்
புகுந்த கவலையைப் போக்கினாள் கண்மணி!
'என்னடி குஞ்சு ஏனிந்த வாட்டம்?'
முன்னொரு பொழுதிலும் வராத சோதனை!
முந்தி நடந்த வதனி அலைவீசும்
நந்திக் கடலோரம் தம்பியோடு போனாள்!
வயிறு குளிருமட்டும் நீரினைக் கையால்
முயன்று அள்ளிக் குடித்தனர் இருவரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்மணி இதனைப் பார்த்துப் பதறி
எண்ணிலாத் துயரால் ஓடி இருவரையும்
குஞ்சுகளைச் சிறகணைக்கும் கோழிபோல்
தஞ்சம் கொடுத்துத் தாங்கிச் சென்றாள்!

2. செவ்வானச் சீதநிலா வானில் எரிந்தது!
கவ்வும் இருளும் மயங்கும் வேளை!
தூங்க முடியாமல் சுருண்டு படுத்து
தாங்க முடியாத காய்ச்சலால் மகளும்
நடுங்கி முனகுவதைக் கண்மணி கண்டாள்!
துடித்தெழுந்து அவளுடலைத் தொட்டுப் பார்த்தாள்!
திக்கென்ற மனதுடன் எழுந்து தேவராசா
பக்கம் வந்து மகள் தனக்கு நெருப்பாய்க்
கொதித்தது உடம்பு! நேற்றுப்பொழுது
உதிக்கக் கஞ்சி குடித்தவள் தானே!
வாங்கி வந்த பனடோலும் கையிலில்லை!
ஏங்கி என்னமிச்சம்? தள்ளி நடந்துபோய்
ஏதும் இருக்குதா என்று பாருங்கோ!
சூது ஒன்றறியாக் குழந்தை அவளப்பா!
மனையாளின் சொல்லைக் கேட்ட கணவன்
பனைமரத்துப் பாதையில் நடந்து சென்றான்!
தேடி வந்த பொருளெதுவும் கிடைக்க வில்லை!
வாடிய முகத்தோடு கைகளைப் பிசைந்த
கணவனைக் கண்டதும் கண்மணி எழுந்துகைத்
துணையாய்க கொண்டு வந்த மல்லியை நீரிலிட்டு
பாத்திரத்தில் வடித்து வதனியின் உலர்ந்து போய்
பூத்திருந்த வாயில் ஊற்றி விட்டாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பிள்ளைகள் தின்னச் சாப்பாடு இல்லை!
கொள்ளை நோய்கள் படையெடுத்துத் தாக்கின!
குண்டுச் சத்தமோ காதைப் பிளக்கிறது!
கண்டவர் நடுங்க எறிகணை பாய்கிறது!
மரநிழலிலே கூடுபோல் உடல்சுருட்டி ஒதுங்கி
இருந்தோம்! ஆறக் கிடைத்தவிடம் இதுதானோ!
செந்தழலில் விழுந்த வளருங் கொடிபோல்
நொந்தழுது என்ன சுகம் கண்டோம் இங்கு!
குடும்பமே துன்பத்தில் மீளாமல் தோய்ந்து
மடிந்து போகும் வாழ்வு எதற்கம்மா?
புழுங்கிய மனதோடு முடிவுக்கு வந்தவளாய்
எழுந்த கண்மணி அணிந்திருந்த வளையல்
இரண்டைக் கழற்றிக் கணவனிடம் கொடுத்துச்
சரங்கோத்த கண்ணீர் ததும்பச் சொல்வாள்!
புன்னகை தொலைத்தம் செல்வத்தை விடவா
பொன்னகை பெரிது! வேண்டாம் எனக்கிவை!
விற்றுவரும் பணத்தைக் கொண்டு இங்கே
குற்றுயிராய்க் கிடந்து சாகும் பிள்ளையை
இரையாக்க என்மனம் தாங்குமா? என்றதும்
விரைவாகக் கணவன் நகைவிற்கப் போனான்!

4. நகைகள் விற்ற பணம் மெல்லக் கரைந்தது!
பகையும் வயிற்றுக்கும் பற்றிய நோய்க்கும்
பட்டினி கிடந்து பசியால் வாடிய
கட்டையனின் குடும்ப நிலையைப் பார்த்துக்
கண்மணியின் நெஞ்சம் தீப்பட்ட மெழுகாக
புண்ணில் குத்திய வேலாகத் தகித்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதனிதன் கைகளில் பொத்திய வண்ணம்
மெதுவாக காலாற நடந்துபோய் ஏதோ ஒன்றை
அயலிலுள்ள கட்டையன் கையில் கொடுத்துப்
பயந்தபடி மரத்தடிக்குத் திரும்பினாள்! அவ்வேளை
ஏவுகணை நெருப்பைக் கக்கிப் பாய்ந்தபடி
கூவிக் கொண்டு மரம் மீதுவிழச் சாய்ந்தது!
கொட்டும் பனிமூட்டம் போல மூச்சு
முட்டும் அளவிற்குப் புகையும் பரவியது!
ஓலமிட்டு மனித உயிர்கள் ஓடுமந்தக்
காலத்தின் கொடுமையை என்னவென்று சொல்ல!
இரக்கம் கொஞ்சமேனும் இல்லாத கொடிய
அரக்கர் நடத்துமிந்த வேட்டைக்குத் தப்பலாமோ?
தனிமரந்தான் தோப்பில்லை! தெரிந்து கொண்டும்
இனிமேலும் இங்கு இருப்பது நல்லதல்ல!
வேறிடம் தேடிச் செல்ல எழுந்தவேளை
சீறியே வந்தது கொடிய ஏவுகணை!
ஓடும் அவர்களைத் துரத்துவது போல்
காடுமேடு அலையவைத்த விதியை என்னென்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - எட்டு

# நெஞ்சுக்குள்ளே சுட்ட நெருப்பு!

1. கொல்லையிலே வீடிருக்கப் பானை நிறையக்
குழைத்தசம்பா சோறிருக்கக் காலம் பார்த்து
நெல்லுடைத்துக் களையகற்றிப் பதமாய் வடித்த
நெடும்எருமைத் தயிரிருக்க ஊரை விட்டுக்
கல்லுருட்டி முள்ளூறுத்தி நாளும் பொழுதும்
கலங்கவுமா முள்ளி வாய்க்கால் நாடிவந்தோம்
புல்லிருந்தால் பசுமேயும்! காய்ந்து பிளந்த
பூமியிலே பெருவாழ்வா கிடைக்கும் ஐயா!

2. கப்புகின்ற இருள்துடைத்து விரட்டிக் கலைக்கக்
கீழ்வானில் சூரியனும் எழுவான்! இங்கு
கொப்புளங்கள் மேனியிலே பொட்டுப் பொட்டாய்க்
கொழிப்பதுபோல் கொடும்போரால் கொடியோர் மண்ணில்
துப்புகின்ற வெடிகுண்டாய் மனித உயிர்கள்
துடிதுடித்து மடிகிறதே! எங்கள் முகத்தில்
அப்பிவைத்த சித்திரம் போல் துயரம் வெளிச்சம்
ஏற்றுவது தெரியாதோ! என்ன வாழ்வு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. விலைவாசி பொருட்களுக்கு ஏறு நிரையாய்
வரவுக்கு எட்டாது உயர்ந்து செல்லும்!
தலைகாலும் தெரியாமல் குடும்ப மெல்லாம்
தறிகெட்ட காளைகள்போல் தவித்து அழுதன!
உலையேற்றி அடுப்பினிலே சோறு வடித்து
உண்பதற்கு ஒருவழியும் தெரிய வில்லை!
குலைநடுங்கி மாந்தர்கள் சூறா வளியில்
கூடிழந்த பறவைபோலத் திகைத்து நின்றார்!

4. விளக்கு நெய்யோ ஒரு போத்தல் ஆயிரம் ரூபா!
வாசமுள்ள தேயிலையோ கிறாம்தன் நூறு!
அளந்து போடும் சீனிகில்லோ ஏழு நூறு!
இதமான றொட்டிமாவும் எட்டு நூறு!
களத்தினிலே செத்தலுடன் பச்சை மிளகாய்
கையிருப்பு முடியுதென்றால் ஐந்து நூறு!
குளத்தினிலே பிடித்தமீனும் நான்கு நூறு!
கொல்லுதையோ இந்த விலைவாசி ஏற்றம்!

5. ஆற்றினையும் அடக்கிடலாம் ! கடிக்க வந்து
ஆடிநிற்கும் பாம்பினையும் அடக்கி விடலாம்!
நாற்றினையே காலாலே உழக்கித் துவைக்கும்
நாசகார வேழத்தை அடக்கி விடலாம்!
காற்றுமாறிப் புயலானால் கூட அதுவும்
கொடுஞ்சீற்றம் தணிந்துபோய் விடலாம்! ஆனால்
வேற்றுவழி ஒன்றுண்டோ வயிற்றுப் பசியை
விரட்டிவிட யாருக்கு இங்கு முடியும்?

6. நாள்களுமே கடந்துசென்று வாரம் ஆகி
நகர்ந்ததொரு வாரமோடி மாதம் ஆகி
மூள்கின்ற காலத்தீ தன்னில் மாதம்
மாண்டுபோக வருடமொன்று வரவு வைக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீள்கின்ற வைய வாழ்வில் என்றோ ஒருநாள்
நிரந்தரமாய் அமைதியினைக் காணும் பணியில்
கேள் மனிதா! நெஞ்சிலுரம் கொண்டு நடந்தால்
குவலயத்தில் பகையழித்து வெற்றி காண்பாய்!

7. சரித்திரத்தைக் கற்காத மூடர் கூடச்
சமத்துவமாய் மனிதரெல்லாம் வாழச் செய்வார்!
இருட்டறிவு படைத்தவனுங் கூடக் கொடிய
இனமொழியின் வேற்றுமையைக் கிள்ளி எறிவான்!
குருடர்கள் பார்வைகெட்டுங் கூட வாழ்வர்!
கருத்துநிலை ஊனமான நன்றி கெட்ட
மிருகங்கள் வாழுகின்ற நாட்டில் இனிமேல்
மனத்தளவில் ஒன்றுகூடி வாழலாமோ!

8. தழைமலிந்த மரத்தினிலே கூடு கட்டித்
தாயோடு பறவையினம் மகிழ்ந்து வாழும்!
குழைகின்ற மாப்போல அன்பில் அனைத்தும்
குலவியின்பம் முக்குளிக்கும்! வெறியர் கூட்டம்
இழைக்கின்ற வன்செயலின் கோரம் மிகுந்து
உயிர்களையே காவுகொள்ளும்! ஆனால் உலகே!
மழைக்காலம் பயிர்களுக்கு வசந்தம்! இதுவோ
மனிதனவன் படைத்துவிட்ட நரகம் தானோ!

9. சத்தமொடு சந்தடியோ இல்லாப் பொழுதில்
சிறியமகன் பஞ்சிருந்த பக்கம் திரும்பி
முத்தமிடக் கண்மணியும் அவனை உச்சி
மோந்துகட்டி அரவணைத்து நிமிர்ந்த வேளை
யுத்தத்தின் எவுகணை சீறி வந்து
அவனையுருத் தெரியாமல் மைந்தன் வாழ்வை
அத்தமிக்க வைத்ததையோ! கலங்கி அவளும்
அளந்தறிய முடியாத துயரில் மிதந்தாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. தாவி வந்து தங்கமகன் தன்னை மார்பு
தழுவிடவே அரவணைத்து மடியில் கிடத்தி
கூவியழச் சக்தியற்றுக் கண்ணீர் சொரிந்தாள்!
குலுங்கியழும் தேவராசா பிணத்தை எடுத்து
சாவிலுயிர் பிரிந்தவனை மண்ணைக் கிளறிச்
சருகைவாரிக் கொட்டிமூடி மனைவி மகளும்
மூவருமாய் வெளியேறிப் பனைகள் நிறைந்த
முள்ளிவாய்க்கால் ஊரைநோக்கி நடந்து சென்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - ஒன்பது

# நீதியே! போர்க்களத்தில் செத்துவிட்டாயா?

1. தீக்கோடு கிழித்தமின்னல் ஒன்று கொடியைத்
துவண்டுவிழச் செய்தது போல் இரவில் விழித்துத்
தூக்கமற்ற நினைவுதந்து அப்பா வோடு
தங்கை விம்மி நானுமழ வைத்துச் சென்றாய்!
ஏக்கத்தால் சாகாமல் செத்துப் பிழைக்க
ஏன் மகனே! இளவயதில் பிரிந்து சென்றாய்!
பூக்கவந்த புதுமலராய் மணப்பாய் என்றேன்!
புலருகின்ற பொழுதினிலே மறைந்தா போனாய்!

2. வெட்டவெளிப் பாழ்நிலமாய்ப் பலனைத் தராமல்
விலங்குமனத் தாருன்னைப் பலிகொண்டாரே!
சுட்டெரிக்கும் உணர்வாலுன் தாயின் உள்ளம்
சுழல் காற்றில் சிக்கி விட்ட பூவாய் ஆச்சே!
வட்டமுகத் தாமரையைப் பார்த்து ஒருகால்
வாட்டுகின்ற பசிமறந்து இருப்பேன் மகனே!
கொட்டவரும் தேளைப் போல் வெறியர் கூட்டம்
குவலயத்தில் மனிதநேயம் தழைக்க விடுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நனைந்துகொட்டும் மழையினுக்குக் கையே குடையாய்
நின்றவாறு பிடித்திருக்கக் குரங்கு குரலைக்
கனைத்தபடி மரம்விட்டு மரம்மேல் தாவிக்
குட்டியையும் தழுவியதைப் பார்த்து ஏதோ
நினைத்தவளாய்க் கண்மணியும் இருந்தவேளை
நொடிக்குள்ளே பறந்து வந்த ஏவுகணையும்
பனைமரத்தை இருகூறாய்ப் பிளக்க அதனைப்
பார்த்தவர்கள் நெஞ்சுபதை பதைத்து வீழ்ந்தார்!

4. காதடங்கப் புலனைந்தும் முடங்கிப் போக
கயிறறுந்த பட்டம் போல் அலைந்து திரிந்த
போதெங்கள் செவிப்பறையில் வந்து நுழைந்த
போர்நிறுத்தம் பற்றியதோர் செய்தி காற்றில்
மோதுண்டு வந்ததென்று கேட்டோம்! கவனம்!
மக்களிங்கு வந்து சரண் அடைய வாய்ப்பு!
நாதியற்றுக் கலங்காமல் வாரும் விரைவாய்!
நலம் பேண வழியிதென்று அரசின் அழைப்பு!

5. இரவென்றும் பகலென்றும் பொழுது முழுதும்
ஏக்கமுடன் வேதனையில் துடித்த மக்கள்
முரசறைந்த மொழிகேட்டு எழுந்து தாங்கள்
மூட்டைகட்டி வைத்ததெல்லாம் எடுத்து வாயால்
பிரசவித்த பொய்களையே உண்மை என்று
பகுத்துணரா மல்நம்பி ஓடிச் சென்று
துரவினிலே விழுந்துவிட்ட யானை போலத்
திக்குமுக்கா டிப்போன கதையாய்ப் போச்சே!

6. கனிகுலுங்கும் தோட்டத்தைக் கனவு காண
கற்றாழைப் புதர்வளரக் கால மாச்சே!
பனிப்புனலில் குளித்துடலின் பருவம் காட்டிப்
பூப்படைந்த மலர் புயலில் சாய்ந்து போயிற்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியென்ன வசந்தத்தைக் கனவு கண்டும்
ஏக்கமொடு பெருமூச்சு தானே மிஞ்சும்!
தனிமையினால் பயனொன்றும் கிடையாதென்று
தேவராசா தீர்மானிக்க எழுந்து சென்றான்!

7. துப்பாக்கி ஏந்திநின்று தயங்கிச் சென்ற
தமிழ்க்குலத்தைத் துழாவியதே கழுகின் கூட்டம்!
அப்பாலும் நடப்பதனை அறியா தவராய்
அங்கலாய்த்து நின்றுயிரும் பிழைக்கும் என்ற
நப்பாசை உந்துதலால் மெல்ல நகர்ந்து
நயவஞ்ச ஓநாயின் முன்னால் வந்து
இப்பாரச் சிலுவையினைத் தோளில் சுமக்க
இறைவனவன் விதித்தானே! மீளவா முடியும்?

8. சனக்கூட்டம் கடலலைபோல் கொந்தளித்துச்
செய்திகேட்டுச் செல்வதா நாம் இல்லை கொடிய
வனத்தினிடையே மலைப்பாம்பின் வாயில் சிக்கி
விட்டமான்கள் போல் துடித்து நிற்கும் மக்கள்
இனத்தோடு சேருவதா என்று மனதில்
எண்ணமிட்டுக் கொண்டவேளை வாழும் கருத்தில்
நினைவுகொண்டு படையினரின் அருகே புழுப்போல்
தரையிலூர்ந்து வரிசையிலே நின்றார் அங்கே!

9. கதிரவனும் பொன்னொளியை வீசி மேற்கே
கடல்மடியில் வீழ்ந்துமூழ்கிக் குளிக்கச் சென்றான்!
முதிர்ந்துவிட்ட நெல்மணிகள் மெத்தை விரிக்க
மொய்த்துவந்த பறவைதுயில் கொள்ளும் நேரம்!
புதியதொரு திருப்பமிது வாழ்வில் நாங்கள்
பயணிக்கக் கதவினையே தட்டும் காலம்!
விதியென்று தலையினிலே எழுதப் பட்டால்
வேறாக மாற்றஎம்மில் யாரால் இயலும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. குறைவயிற்றுக் கஞ்சியுடன் அந்த இரவில்
கூடிநிற்கும் ஆடவர்கள் பெண்கள் குழந்தை
சிறைவாழ்வில் சிக்கி நின்ற கோலம்! காலும்
சோர்ந்துமிரு கைகளுமே தளர விழிகள்
நிறைந்துவிம்மிக் கொப்புளித்த நீரால் நனைந்த
நிட்டூரம் பார்த்தகல்லின் மனமும் கரையும்!
முறைகெட்டு நீதிகெட்ட உலகில் மனிதன்
மூச்சுவிட்டு உயிர்வாழ இடமே இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்பாவின் ஈற்றடிபோல் தனியே கிடந்தாள்!

1. வேலியில்லா விளைநித்தில் யானை புகுந்து
வேரோடு எறிந்தழித்த கதையைப் போலப்
பாலிருந்து துளும்புகின்ற கிண்ணம் சரிந்து
பால்சிந்தி மண்ணாகும் நிலையைப் போலத்
தோலிருக்கச் சுளைவாங்கும் கொடியா ரோடு
தோழமையின் அடையாளம் காட்டி வாழ்தல்
கேலிக்கு இடமாகும் என்ற நினைப்பே
கூடிநின்றோர் மனமதுதான் கொண்ட குழப்பம்!

2. போராடிக் களத்தினிலே வீழ்ந்து மேனி
புழுதியிலே குளிப்பதனைப் பார்த்த இடத்தில்
ஈரரத்த நதிபாயும் மண்ணில் புகுந்த
ஈனர்கள் விதைத்துவிட்ட கொடுமை தன்னால்
நீரோடிக் கொப்புளித்த விழிகள் கலங்க
நேற்றோடு நாளைக்கும் இன்றும் அவரின்
ஊராளும் அக்கிரம வேட்கை தானே
உதிர்ந்தமலர்க் கொம்புபோலாக் கிற்று எம்மை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மதவேழக் கால்பட்டு முறிந்து வீழ்ந்த
மல்லிகைப்பூங் கொடிபோல மக்கள் விழியில்
நதிக்கண்ணீர் பொங்கிவர எள்ளி நகைத்த
நரிக்குள்ளக் கூட்டமிங்கே குவித்து வைத்த
சதையுடல்கள் மேலேறி உழக்கி ஓடும்
சோகத்தைத் தேவராசா கண்டு பதறி
இதழ்துடிக்கக் கண்மணியின் பக்கம் திரும்பி
ஏதோவோர் வார்த்தை சொல்ல முயன்ற வேளை

4. வெட்டவில்லை வான்திரையில் மின்னல்கோடு!
வாரியலை வீசவில்லை நீலக்கடலும்!
கொட்டவில்லைச் சூல்கொண்ட மேக மழையும்!
காற்றதுவும் புயலாக மாற வில்லை!
வட்டமிட்டுப் பேரொளியை எழுப்பி வந்த
வெடிகுண்டு தேவராசா உடலில் பட்டுச்
சுட்டெரித்த சோகத்தைக் கண்ட மனையாள்
சிட்டாகப் பறந்தவனை வாரி யணைத்தாள்!

5. விடிகின்ற பொழுதுகளே இனிமேல் எந்தன்
விழிகளுக்கு இல்லையம்மா! அன்பு பொங்க
மடிமீது கிடத்தியென்னை அணைத்த கையை
முத்தமிட நான்கொடுத்து வைக்க வில்லை!
பிடியிழந்த களிறுபோலப் பேதை அழுது
புலம்பவுமோ இந்நாளும் வந்ததையா!
இடிமின்னல் விழுந்தெரிந்த மரத்தைப் போல
என்னுயிரும் கருகிடாதோ தரணி தன்னில்!

6. மீட்டுதற்கு ஆளில்லா யாழ்போல் நானும்
மூலையிலே கிடந்தழிய விதியோ! முன்பு
கேட்டு விட்ட மோகனந்தான் இன்று முள்ளுக்
காட்டினிலே முகாரியாகக் கேட்க முறையோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டினிலே பறவைகள்போல் கூடி வாழ்ந்தோம்!
காதறுந்த ஊசியொன்றின் காதை ஆனோம்!
ஈட்டிமுனை பாய்ந்துநெஞ்சைக் குதறி னாற்போல்
இனியெனக்கு வேதனைதான் வாழ்வில் பரிசா?

7. வெண்பாவின் ஈற்றடி போல் தனியே கிடந்து
விம்மிமனம் தத்தளித்து வாடு கின்றேன்
கண்ணீரின் வெள்ளத்தில் மூழ்கி நனைந்து
கணவனையே தேடுகின்றேன்! அவனைப் பிரிந்து
பெண்பாவை சாக்காட்டில் வெந்து நாளும்
பட்டதுயர் போதுமையா போதும் ! இந்த
மண்மீது நேர்ந்துவிட்ட பிரிவு ஏதும்
மணவாளன் பிரிவைப் போல் நெஞ்சைச் சுடுமோ?

8. பட்டினியாய் எத்தனைநாள் உணவுக் காகப்
பசித்திருந்த வேளையுண்டு! சாவும் கதவைத்
தட்டிநின்ற நேரமுண்டு! துன்பக் கடலில்
தனிப்படகாய்ப் பயணித்தோம்! மேகத் தளத்தில்
வெட்டிவெட்டி மின்னல்தீக் கோடு கிழிக்க
விம்மிஒலி முழங்கவானம் குலுங்க இவைக்கு
வட்டியாகக் கொடுஞ்சாவு இலக்கு வைத்து
விரித்திட்ட வலையிலெந்தன் மன்னன் வீழ்ந்தான்!

9. கோடிவார்த்தை சொல்லிமிகக் கதறி அழுது
களைத்துவிட்ட கண்மணியும் மகளைப் பார்த்து
வாடியெந்தன் உயிரான மகளே! வதனி!
வந்தவர்கள் சென்றுவிட்டார் வரிசைக்குள்ளே!
ஓடிப்போய் நாமுமந்தக் கூட்டத் தோடு
ஒன்றாகச் சரணடைவோம்! என்று சொல்லி
நாடிழந்த அகதிகள் போல் மெல்ல நடந்து
நீண்டதொரு பெருமூச்சு விட்டா ரன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஏழுநிறம் சங்கமிக்க வானந் தன்னில்
எழில்காட்டி மறைந்தவான வில்லோ வாழ்க்கை!
வாழுகின்ற நாள்வரைக்கும் உரிமை பெற்று
வாழ்ந்தாலே போதுமடா! துணிவில் லாத
கோழைகள்போல் வாழ்வதனால் பிறவி எடுத்த
குறிக்கோளும் நிறைவேறப் போவ தில்லை
ஆழமனத் துயரத்தால் உடைந்து மயங்கி
அடிமைபோல வாழ்வோர்கு மீட்சி உண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - பதினொன்று

# கொழுந்துவிட்டெரியும் தீக்குள்ளே கொடிமலர்

1. சிறகொடிந்த பறவைகள் போல வாழவோ
பிறவி எடுத்து இம்மனித கூட்டம்
வந்ததுவோ அம்மா! அறிந்திராத துன்பம்
தந்ததுவோ எனக்கவலை கொள்வதேன்? போரில்
கொய்து விட்ட உயிர்மலர்கள் தொகையும் என்ன?
எய்தவன் இருக்க அம்பை நோவானேன்?
முள்ளி வாய்க்காலில் பாய்ந்த வெடிகுண்டால்
கிள்ளி எறியப்பட்டோரை யாரறிவர்!
பழுத்த கனியை வட்டமிடும் வௌவால்!
கொழுத்த பிணங்களைக் குதறும் கழுகு!
இம்மியும் கருணை இல்லாப் பாறையான
அம்மிக் கற்களையா குற்றம் சொல்வது?
மணவாளன் பிரிவு நெஞ்சைப் பிழிவதனால்
தணலை வயிற்றில் கட்டிக் கொண்டு
நடமாடு கின்றோம் செத்த பிணங்களாய்!
முடங்கிவிட்ட எதிர்காலம் திரும்புவதில்ல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தமண் பற்றிய சோக நினைவு
தந்த சுழியில் இருந்து விடுபடாத
கண்மணியும் வதனியும் யுத்த
மண்மீது நடந்து கூட்டத்தில் சேர்ந்தனர்!

2. எக்கணமும் அணைந்துபோகும் விளக்குப் போல
மக்களுயிர் ஊசலாடும் வேளை படையினர்தம்
வாகனத்தில் நெருக்கமாய் ஏற்றி எங்கோ
வேகமாய் சென்றனர் இரவுக்கு முன்னே!
கிட்டாத தேனெடுக்கச் செல்வபன் விழிகளுக்கு
எட்டாத தூரம் கடப்பது போல் எங்கோ
மூலையில் இருந்த மெனிக்பாம் முகாமை
காலையில் சென்றடைந்து இறக்கிவிடப் பட்டோம்
ஆந்தைகளின் கூச்சலும் தவளைகள் அலறலும்
தாந்திமி எனத்தாளம் ஒலிக்க எங்கள்
செவிகளை வருத்தின! இழப்புக்கள் தன்னால்
தவித்து மீளாச் சோகத்தில் இதயம்
சுக்கல் சுக்கலாக உடைந்து போனதே!
திக்குத் தெரியாத காட்டில் அகப்பட்ட
பிள்ளைபோல் அலைந்து கொடிய
கொள்ளையர் கையில் சிக்கி விட்டோம்!
படுத்து இப்பொழுதைக் கழித்து விட்டால்
அடுத்த பொழுதில் என்ன நேருமோ?
சாகும் வரையில் அவலத்தால்
வேகும் அம்மா நெஞ்சம் எரிந்து!

3. ஏற்றிச் சென்ற வாகனம் கிழக்கே
வேற்றிடம் ஒன்றுக்கு விரைந்து சென்றது!
அகதிகள் வாழும் வெலிக்கந்தை முகாமில்
நகத்தோடு சதையாய் இணைந்தனர் அங்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகத்தால் இன்னல் அடைந்தோர் விடுதலை
மோகத்தில் வேட்கை கொள்ள அஞ்சுவர்!
உடையும் உணவும் படுக்க இடமும்
கிடைத்தால் போதும் அம்மா! பின்புதான்
மற்றத் தேவைகளை நிறைவு செய்ய
முற்றும் சலுகையை எதிர்பார்க்க வேண்டும்!
என்று இவ்வாறாய் மக்கள் கூட்டம்
குன்று முட்டிய குருவிபோல் இருந்தபோது
நாட்டையாளும் உரிமை எமக்கென மனிதரை
வேட்டையாடும் வெறியர் நால்வர் வந்தனர்
உருட்டு விழியால் ஒருவர் ஒருவராக
மருளுகின்ற இளையோரில் இலக்கு வைத்துப்
பாய்ந்து ஒருவனையே கையால் பிடித்து
தாய்க்குலம் கதற வேட்டை, முடிந்ததெனத்
தறதற என்றவனை இழுத்தபடி
புறம்பாய்க் கொண்டு சென்றார் பொல்லாதோர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - பன்னிரண்டு

# மலைப்பாம்பு வளைத்த புள்ளிமான்

1. சலிப்பைநீக்க வேளையோடு வந்து சேரும்
சோறுகறி! தேநீரை உண்டு உறங்கி
வெலிக்கந்தை முகாம்தனிலே தங்கி யிருந்த
வதனியோடு கண்மணியும் பார்த்திருக்கக்
கலிகாலக் குடிலர்கள் வருகின் றாரோ!
காலுராய்வு கேட்கிறதே! புதர்கள் யாரைப்
பலியெடுக்க வருவாரோ என்று எண்ணிப்
பதறிநெஞ்சம் நெக்குருகக் கலக்கம் அடைந்தார்!

2. நேற்றிரவுப் பொழுதினிலே மெனிக்பாம் முகாமில்
நிட்டூரக் குரல்கேட்டுத் திகைத்தோம்! நவீனக்
கூற்றுவர்கள் நிகழ்த்திவைத்த கொடூர விளைவோ!
கயவர்கள் ஆட்சியென்றோ முடியும்? செழிப்பு
வீற்றிருந்த நெல்மணிகள் குலுங்கும் வயலில்
விஷப்பூண்டா? நினைக்கமனம் துடிக்கு தையோ!
மாற்றறியாத் தங்கமான பெண்கள் மானம்
முட்பன்றி ஏப்பமிட்ட முயலா யிற்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஒவ்வொருநாள் முடிந்துமாலை வந்து போகும்!
அகதிகளின் இதயங்கள் வெந்து சாகும்!
செவ்வானம் விடைபெற்று இருளும் சூழ்ந்தால்
சஞ்சலமும் தானாகத் தொற்றிக் கொள்ளும்!
எவ்வாறு கைங்காரியம் என்ன நடக்கும்
என்று நம்மில் யாரறிவார்? பயந்து நடுங்கும்
கொவ்வையிதழ்க் கன்னியரை கழுகுக் கூட்டம்
கொத்தியெடுக்க அழைப்புடனே கூட்டிச் செல்லும்!

4. வட்டமுகத் தாமரையில் மொய்த்தி ருக்கும்
வண்டுவிழி வதனியைத்தான் கொடிய துன்பப்
பட்டுவளர்த்த கண்மணியும் கண்கள் மூடிப்
படுத்துறங்க முடியாமல் தவித்தி ருக்க
நட்டநடு நிசியினிலே அரவங் கேட்டு
நாயொன்று குரைக்க வந்த வீணர் தாய்தான்
தொட்டுவளர்த்த வதனியைக்கை நீட்டி அழைத்துத்
தெருவோரம் கொண்டு சென்றார்! மறைந்தார் இருளில்!

5. பொங்குகடல் மடியிலல்லி பூத்தா ஆடும்?
புழுதிவந்து விழுந்தகண்கள் பார்வை தருமா?
சிங்கமொன்றின் முன்னாலே மானி ருந்தால்
சத்தியத்தைப் போதிக்க கேட்டாநிற்கும்?
எங்கெங்கு மனிதத்தை அறியா மூடர்
ஆணவத்தால் கொதிப்பேறி உயிர்க ளையே
சங்கரித்து வாழ்கின்றார் நீதி மறந்து!
சுயநலந்தான் வென்றதாகச் சரிதம் இல்லை!

13962

6. கல்லெறிந்த குளத்துநீரும் அலைகள் எழுப்பி
கலைந்தபடி அடங்குவது போல உணர்வு
சில்லிட்டுப் போயிருந்த அத்தாய் மகளும்
சென்ற பாதை தனைத்துருவி ஓடி விம்மிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாதோர் கைச்சிறையில் சிக்கி விட்ட
புதுமானை நினைந்தழுதாள்! வேடன் கையில்
வில்லாக வளைத்தொடிந்த இளையோர் தம்மின்
வெற்றுடம்பைக் காண்போமா என்பர் மற்றோர்!

7. காலமொரு நாள்மாறி விடிந்து எம்மை
கவ்விநின்ற கங்குலுமே விலகும் என்று
ஓலமிட்டு அழுதுவிம்மித் துடிக்கும் மக்கள்
ஒருவரோடு ஒருவருமாய்க் கட்டிப் புரண்டு
ஆலமர விழுதுகள் போல் முறுகித் திரண்டு
அநியாயக் கொடுங்கோலர் கையில் கிடைத்த
கோலழகக் குழந்தைகளின் அவல முடிவைக்
காத்திருந்து கண்ணீரைச் சொரிந்தார் அன்றோ!

8. நிலாவான வீதியிலே பவனி செல்ல
நட்சத்திரத் தோழிகள்கை விளக்க எடுத்தார்!
உலாவிவரத் தொடங்குமிளந் தென்றல் காற்றும்
ஏங்கிநிற்கும் மலரிதழைத் தழுவும் நேரம்!
பலாப்பழத்தைச் சுற்றிமொய்க்கும் ஈக்கள் போலப்
பெண்பித்து தலைக்கேறித் தழைத்த பெண்ணை
விலங்கிதயம் குடிகொண்டோர் போகப் பொருளாய்
வைத்தணைத்து ஆடினரே காம வேட்டை!

9. மலைப்பாம்பு வளைத்த புள்ளி மானாய் அங்கு
மருளுகின்ற விழிகளோடு நடுங்கி நின்ற
குலையாத கட்டுடலைத் தொட்டு அணைத்துக்
கூக்குரலைச் சங்கீத மாக்கி கடலில்
வலைப்பட்ட மீன்களாக்கிச் சரசம் புரிந்த
வக்கிரத்தின் நரிகளுக்குத் தருமம் ஏது?
இலையென்றும் பூவென்றும பிஞ்சு என்றும்
ஈனர்கள் கண்ணுக்கு மனிதம் படுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பெண்பித்துப் பிடித்தலைந்த புல்லர் தமக்குப்
பருவத்தில் பூம்மணி மதர்த்துத் தழைத்து
எண்ணிடாத சுகக்கலசம் போல கிடந்த
இளமையான மங்கையரைக் கசக்கிப் பிழிந்து
மண்ணுலகில் நரகத்தைச் சிருட்டி செய்து
முடிவற்ற அவலத்தின் நாசக் குரலைக்
கண்ணுறக்கம் கொள்ளாமல் இருந்த பெற்றோர்
காதுகளில் அதிரவைத்தே செல்லும் காற்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - பதின்மூன்று

# பெண்டாள நினைத்துவிட்ட சண்டாளன்!

1. காடுசூழ்ந்து கடல்கொஞ்சும் முல்லைத் தீவில்
களம்தந்த மாத்தளனும் சுதந்திர புரமும்
சூடுபறந்த போராட்டம் தன்னை இனிமேல்
சீக்கிரமே நிறுத்திவைக்க முடிவு செய்தோம்.
பாடுகளை மறந்து நீங்கள் பயமே இன்றி
போர்த்தவிர்ப்பு வலயத்தின் உள்ளே வாரீர்!
கூடுமான பாதுகாப்பு இங்கு உண்டு!
கவனமாக இப்பொழுதே வந்து விடுங்கள்!

2. பதற்றத்தில் இருந்தமக்கள் செய்தி கேட்டுப்
பயமடங்கிச் செல்லலாமோ! இதுவும் சூதோ!
புதர்மண்டிக் களர்நிலமாய்க் காணும் வாழ்வில்
புலருகின்ற இளங்காலைப் பொழுது தானோ!
இதமான பேச்சுதனில் மயங்கி நம்பி
ஏமாந்து சென்றாலோ பழைய குருடி
கதவுதிற என்றகதை தொடரும் கதையோ!
கால்மீது எப்போது கண்ணைத் திறக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வாவிநீரின் மஞ்சத்திலே உறங்கிக் கண்கள்
வளருகின்ற தாமரையும் வசந்த கீதம்
கூவிவந்து இன்குரலால் பாடும் சோலைக்
குயிலினமும் கிளையமரும் வேளை! ஒளியைத்
தூவிவான உலாத்தொடங்கும் வெள்ளி நிலவும்
தாரணிக்கு வெளிச்சமிடும் நேரம்! தோளில்
காவியகைத் துப்பாக்கி யோடு முகாமில்
காலணிகள் உரசபடை வீரர் வந்து

4. உங்களோடு பொல்லாத பயங்கர வாதி
ஊடுருவி உள்நுழைந்து விட்டான்! உள்ளே
இங்கவனைக் கண்டவர்கள் சொல்ல வேண்டும்!
இல்லாது போனாலோ கஷ்டம்! எனவே
தங்கியுள்ளோர் பயம்நீக்கி முன்னே வந்து
தயங்காமல் அவனைத்தான் காட்ட வேண்டும்
சங்கொலித்த சத்தம்போல் விடுத்த அறிக்கை
சந்தடியே இல்லாமல் மௌனித்த தன்றோ!

5. தசையாட்டம் காணாது மரம்போல் நின்று
துருவியெங்கும் பார்த்தமக்கள் கூட்டம் சிறிதும்
அசைவற்று நிற்பதனைக் கண்ட வீணர்
ஆத்திரத்தால் சிவந்தவிழி நெருப்பைக் கொட்டக்
கசையடியால் இளைஞரையே அடித்து நொருக்கிக்
கண்களையே உறுத்திநின்ற யுவதி களையும்
வசைசொல்லி அச்சுறுத்தி இழுத்த படியே
வஞ்சமெலாம் தீர்த்துவாசல் கடந்து போனார்!

6. அன்புக்கு ஒருமகளாய் ஆசை வைத்து
ஆரத்தித் தீபமதைக் காட்டி அருகில்
சின்னவளாய் நடைநடந்த செல்வ மகளே!
சீதளப்பூ நகையினையே காண்பதென்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பங்கள் தொடர்கதையோ! எம்மைப் பிடித்த
துயரங்கள் வற்றாதகடலோ! மேலும்
இன்பங்கள் எட்டாத நிலவோ! தேனோ!
இதற்குமேலும் என்னசொல்லி ஆறு வேனோ!

7. வானத்திற் கெனப்பிறந்த வண்ண நிலவை
வார்த்தெடுத்த பூவழகுத் தங்கச் சிலையை
மானத்திற் கெனப்பிறந்த கவரி மானை
மணிமுத்தை வதனியையே பிடித்துச் சென்று
தானத்துப் பொருள்போல நினைத்து விட்ட
தசைதின்னிக் கழுகுகளும் அவளைக் கொண்டு
போனவழி தெரியாது பேதைத் தாயும்
புலம்பநீரும் திறந்ததையோ இமையின் கதவை!

8. வேருக்கே கொதிநீரை ஊற்றி மரத்தை
வீழ்த்துகின்ற அறிவிலிகள் வாழும் உலகில்
சீருக்கே வறுமை கொண்ட சிலரின் செயலால்
சிறப்போடு சிலபொழுது கழியும்! இந்த
ஊருக்கே கெட்டகாலம் விரைவில் வந்து
உதயமாகிவிட்டதந்தோ! இருளில் கிடக்கும்
பாருக்கே அழிவுதரக் கொள்ளை நோயும்
பிரளயமும் ஒன்றாகி வாராதோ இந்நாள்!

9. ஆத்திரத்தால் கண்மணியின் விழிகள் கொட்டும்
ஆறோடி மார்பினையே நீராட் டிற்று!
பூத்திருந்த மலரைத்தீ கருக்கி விட்ட
பொழுதினையே பார்த்திருந்த பாவி யானேன்!
காத்திருந்த பொன்னூஞ்சல் முறிந்து கெட்ட
கனவாக நடந்தேறி முடிந்த துயரம்
மாத்திரமே போதுமேயென் உயிரைக் குடிக்க!
மண்ணுலகில் இனியுமேனோ வாழ வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. குத்துமுனை பிய்த்தெடுக்கும் கொடிய முள்ளுக்
கம்பிவேலி தன்னிலேதன் முகத்தைத் தேய்த்துக்
கத்துமவள் குரல்கேட்க ஒருவரி ல்லை!
கூவியழ அவளுடலில் சக்தி இல்லை!
முகத்தைக்கை நெகிழ்ந்தவள்போல் முனகும் அவளை
மூண்ட பெருந் தீப்பார்வை தன்னால் வெறித்துச்
சத்தமிட்டான் ஒருவீணன்! அதனைக் கண்டும்
சற்றேனும் பயந்திடாது குழறி அழுதாள்!

11. ஈரரத்தம் வழிந்தோடிக் காய்ந்து விட்ட
இதயத்தின் கூக்குரலோ அடங்கும்? யுத்தம்
கோரமுகம் காட்டி நின்ற மண்ணில் மனித
குலம்வாழ வழிகாட்டும் பெரியோர் உண்டா?
தூரநோக்கு இல்லாத அரக்கர் நெஞ்சில்
துணியளவு இரக்கத்தைக் காணல் அரிது!
கூரம்பால் கீறிநெஞ்சைக் கொத்தி குருதி
கொப்புளிக்க வைத்தமூடர் வெறியா அடங்கும்?

12. மண்புழுப்போல் பிறருக்கு நன்மை செய்தாள்!
மற்றவரின் துயரத்தில் பங்கு கொண்டாள்!
கண்மணியின் வதனியினைத் துரோகி இழுத்துக்
கொண்டுசென்ற கொடுமையினைக் கண்ட வர்கள்
புண்ணாகி நெஞ்சுநொந்து புலம்பி நின்று
பெருங்கடலில் புயல் காற்றில் சூழலும் படகால்
கண்ணீரும் கம்பலையு மாக இருந்த
கண்மணியியைத் தேற்றுவதற்கு எழுந்து போனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - பதினான்கு

## வேதனையும் விழிநீரும்

1. ஏரால் உழுத பொன்வயலில்
இலவம் விதையும் தூவலாமோ?
நாரால் கோர்த்த பூமாலைதனை
நெடிய கயிற்றால் கட்டலாமோ?
யாரோ புரிந்த அக்கிரமம்
எங்கள் தலையில் விழுந்ததம்மா!
ஊரோ உறவோ இல்லாத
அகதி வாழ்வைத் தந்ததிந்நாள்!

2. விட்டில் பூச்சி வட்டமிட்டு
விளக்கை அணைக்க முயன்றதைப்போல்
கட்டில் தனிலே கிடத்தியவள்
கொஞ்சு மிதழைக் கடித்துநெஞ்ச
மொட்டில் முகத்தைப் புதைத்துணர்வு
மயங்கக் காம வெறிதீர்த்தான்!
தொட்டில் துயிலும் குழந்தைபோல
தளிராய் வதனி கிடந்தாளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வல்லூ றோடு போராடும்
வெள்ளைப் புறாப்போல் பதுங்கிமெல்லக்
கொல்லும் பூனை தன்வாயால்
குதறி விட்ட கிளிபோலும்!
பல்லில் நஞ்சு கொண்ட பாம்பு
பிடித்த மானைப் போலுமிந்தக்
கல்லு மனத்தோர் கசக்கிமுகர்ந்த
கணக்கைச் சொல்ல யாருளரோ!

4. விதியின் மீது பழிபோட்டால்
வீணர் கொடூரம் என்னாகும்!
நதியின் வெள்ளப் பெருக்கைப் போல்
நாங்கள் அழுது மடிகின்றோம்!
கதியில் லாமல் விபரீத
கொடிய விளைவைச் சந்தித்தோம்!
சதியால் நிகழ்ந்த அறுவடையைச்
சகித்து வாழ முடியலையே!

5. கொய்யாக் கனிபோல் மணந்தபெண்கள்
கொடியோர் கையால் அழிந்தனரே!
பொய்கை தன்னில் நீந்துமன்னம்
பொங்குங் கடலில் நீந்திடுமா?
பெய்யும் மழையும் பெருங்காற்றும்
புயலும் எழுந்து அழிக்காதோ!
தெய்வம் இதனைப் பொறுத்திருந்தால்
தருமம் நீதி இல்லையாமோ!

6. ஈக்கள் எறும்பு மொய்க்காது
இரவும் பகலும் பாதுகாத்து
தேக்கு மரத்தில் கடைந்தெடுத்த
தொட்டில் மீது தவழ்ந்தவளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்கள் நிறைந்த காட்டினிலே
புகுந்த தென்றல் காற்றுப்போல்
மாக்கள் வாழும் மண்ணிலேனோ
மகளே! வந்து பிறந்தாயோ!

7. கொண்டல் காற்றாய் சீறியெழுந்து
குலத்தின் பகையைக் கூண்டோடு
செண்டா டிநின்று வருவாய்நீ!
சூடும் வெற்றி நாள்வராதோ!
வண்டு இசைத்த பூங்காவை
வரண்ட பாலை ஆக்கினரே!
கண்டு நெஞ்சு துடிக்கின்றோம்!
காலம் ஒருநாள் பதில்சொல்லும்!

8. வைக றைக்காய் காத்திருக்க
வயிறு கனத்து வடி வெடுத்து
தைமா தத்து மங்கல நாள்
தன்னில் பிறந்தாய் அருட்செல்வா!
மையெ ழுதுமுன் கண்ணழகை
மண்ணில் இனிமேல் பார்பேனோ!
கைகள் அணைக்கும் வேளை பாம்பு
கொத்தி உயிரைப் பறித்ததடா!

9. இதயக் குமுறல் கண்மணியின்
இதழைப் பிரித்துக் கொட்டிற்று!
உதயம் காணக் காத்திருக்கும்
உலகும் மறுநாள் காணுமன்றோ!
எதையும் காத்துப் பொறுத்திருந்த
எமக்கு நிகழ்ந்த விடிவென்ன!
சதையும் கிழிந்து குருதிசிந்திச்
சுமந்த உயிரும் போனதுவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. முள்ளி வாய்க்கால் உயிர்ப்பலியின்
மடியே என்றோர் வரலாற்றை
அள்ளித் தந்த நிலப்பரப்போ!
அவலம் நிறைந்த அக்கினிமண்!
கொள்ளி வைத்து அழவிடாத
கருணை மலிந்த கூடாரம்!
கள்ளிப் பாலைக் கண்ணிலூற்றிக்
கவலை போக்கும் கொடிய ஆலை!

11. குழியைத் தோண்டி மனிதஎச்சம்
குவிக்கும் வேளை எவர்மீதோ
பழியைப் போடும் பொய்யுருவப்
பேய்கள் உலவும் மண்ணில்நேர்
வழியைப் பற்றி நடப்பவர்க்கு
வருமே துன்பம்! கோடி கோடி
விழியை நனைக்கும் வேதனைகள்
விலக வேறு மார்க்கமுண்டோ?

12. காடாய் மேடாய்க் களர்நிலமாய்க்
கிடந்த மண்ணில் ஏருழுது
மாடாய் உழைத்துச் செல்வமீட்டி
மனித உரிமை கண்டுவாழ்ந்தோம்!
போடா மூடா எனக்கொடுமை
புரிந்த பேய்கள் கொலுவிருந்தார்!
வாடா தம்பி நமக்குமொரு
வாசல் திறக்கும் ஓர்நாளில்!

10 DEC 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - பதினைந்து

# உடல்மண்ணுக்கு உயிர்தமிழுக்கு!

1. அலையடிக்கும் கடலுக்கும் காய லுக்கும்
இடைப்பட்ட நந்திக்கடலின் முற்றந் தன்னில்
உலையேற்றிச் சோற்றுணவை உண்டு உறங்கும்
அந்தநாளும் வாராதோ என்று இருந்தோம்!
குலைநடுங்கிச் செவ்வு திரம் உறைந்து போகக்
குண்டுபாய்ந்து காவு கொள்ளும் உயிரைச் சாவு!
வலைவாரிச் சுருட்டுகின்ற மீனாய் மக்கள்
வகைதொகையும் இல்லாமல் மடிந்தே போனார்!

2. ஆலமரம் போல்விழுது நிலத்தில் ஊன்றி
எறிந்துறவு வளர்த்தமண்ணில் இன்பம் கண்டு
காலமெலாம் மகிழ்ச்சிபொங்க வாழ்ந்தி ருக்கக்
கனவு கண்டோம்! கனவுபகல் கனவாய் மாறி
நாலுபத்து ஆயிரமாய் ஒரேயோர் நாளில்
நம்முறவின் பலிக்களமோ முள்ளி வாய்க்கால்!
ஞாலத்து நாடுகளும் நடுவண் சபையும்
நீதிக்குக் குரலெழுப்ப மௌனித்தாரந்தோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. எத்தனையோ நாடுகளில் உரிமை பறித்து
எடுத்ததனால் மூண்டபோரைத் சரிதம் சொல்லும்!
கத்துகடல் எல்லையினை மீறிச் சென்று
களமிறக்கின் போர் வெடிக்கும்! அடக்கி ஆளும்
பித்தமொன்று தலைக்கேறி பிறனைக் கசக்கிப்
பேயடிமை கொண்டால் போர் மூளும்! ஆனால்
முத்துநிகர் மண்காத்த உயிரா யுதமே
முழுமூச்சில் ஏந்தியதே முள்ளி வாய்க்கால்!

4. எட்டுப்பத்து ஆயிரமாய் தலைவன் மாண்டு
ஒழிந்ததனால் விதவைகளாய் வாழ்வோர் கணக்கு!
கட்டுடலில் போர்வடுக்கள் தன்னால் அங்கம்
கெட்டழுவோர் ஆயிரமாம் அவர்கள் கணக்கு!
வட்டுவாகல் முள்ளிவாய்க்கால் புதுக்குடியிருப்பு
வனாந்திரம் போல் நெருப்புமூண்டே தகிக்கும் உயிரை
விட்டிடவா அமைதியான வலயம் பார்த்து
வந்தோமிங்கு வேகிறதே நெஞ்சு துடித்து!

5. தாலியிட்ட கணவனையே போரில் பிரிந்து
தணலின்மேல் புழுவான மனைவி உலவும்
காலிரண்டை ஊடுருவிக் குண்டு பறிக்கக்
குருதிதோய்ந்த மனைவிகளின் ஓலம் என்ன?
தோலுடலைக் கிழித்த குண்டு துணைதான் என்று
தொட்டுவளர்த்த ஒருமகனைப் பலிகொண்ட தையோ!
நூலிழையில் துப்பாக்கி இலக்குத் தவறி
நாளைக்கோர் குழந்தையைக் காவு கொள்ளும்!

6. மரம்பற்றிப் பிடித்துள்ள இலையைக் காற்று
மோதிவிழ வைப்பதுபோல் யுத்த களத்தில்
சிரமறுத்து தசைகிழித்து நிலத்தை ஈரச்
செங்குருதி நீராட்டும்! உலகில் சாகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம்பெற்று வந்தவர் போல் துட்டர் கூட்டம்
வெறிக்கூத்து ஆடினரே! இங்கு நேசக்
கரம்பற்றிச் சமாதானம் செய்யும் உள்ளம்
கடுகளவும் இல்லையம்மா காட்டேரிக்கு!

7. கொல்லாது நீதிகாக்கும் கற்ற பெரியீர்!
கொண்டதொரு இலட்சியத்தில் வழுவா நின்று
பொல்லாத இனவெறியை உலகில் இருந்தே
பூண்டோடு சமாதிகட்ட எண்ணு வோரே!
கல்லாது நெறிமறந்து மனித நேயக்
கருணைக்கு மனதிலிடம் கொடுக்கா தோரை
நில்லாது தயங்காது தட்டித் திருத்தி
நாடுவாழ நல்லபணி செய்வோம் வாரீர்!

8. புனல்சொரியும் விழியிரண்டைத் துடைத்து எழுத்து
புதியவிதி ஒன்றையிங்கே எழுதி வைப்போம்!
அனல் சொரியும் நெஞ்சங்கள் அமைதி காண
ஆனவழி அறிவுவழி சமைப்போம்! எல்லோர்
மனமாளும் வேட்கைகொண்டு மனிதம் வாழ
மண்மீது சுதந்திரத்தின் உரிமை காப்போம்!
எனவுமொரு சபதத்தை நெஞ்சில் ஏற்று
எங்களுயிர் நிலம்மீது வாழ்வோம் என்றும்!

9. நேற்றிந்தோர் இன்றில்லை என்ற நியதி
நீங்காது தொடருந்தாய்ப் பாலில் கொடுத்த
ஆற்றலிலே வீறுகொண்டு மார்பில் விழுப்புண்
ஏந்திநின்றோர் யுத்தகளப் பரிசாய் மூச்சுக்
காற்றடங்கி இன்னுயிரைப் பிரித்து சொந்தக்
கானகத்து மண்ணினிலே புதைத்தால் போதும்!
மாற்றுயர்ந்த தமிழுக்கு உயிரும் பிறந்த
மண்ணுக்கு என்னுடலும் அர்ப்ப ணித்தேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10\. தீச்சுவாலை பற்றியெரியும் பாலை போலத்
தாயகமண் தத்தளித்த நெஞ்சு கலங்கி
மூச்சிரைக்கக் கண்மணியும் முகாமில் இருக்க
மனிதரையே கேடயமாய் நம்ம வர்கள்
கூச்சமின்றிப் பயன்படுத்தும் இழிவு தொண்டுக்
குழுவாலே வெளிவந்த சேதி கேட்டுப்
பேச்சிழந்து திகைத்துநின்ற மக்கள் கூட்டம்
பொருமுவதை விடுத்து வேறு வழியும் உண்டோ?

11\. மல்லிகையில் பூநாகம் நெளிந்த தைப் போல்
மாருதமாய்த் தவழ்ந்ததென்றல் புயலா னதைப்போல்
இல்லையென்று எதிலுமொரு நிறைவு கண்ட
இந்நிலத்தில் வறுமைகுடி கொண்ட தைப்போல்
சொல்லிடவே இனிக்கின்ற மோக னத்தில்
சூழ்நிலையால் முகாரிவந்து கலந்த தைப்போல்
பல்லினிலே நஞ்சையேந்தி உயிர் குடிக்கும்
பாம்பு போலத் தலையாட்டி அங்கு வந்தான்!

12\. கட்டுமலர் விரிந்துமணம் வீசும் அழகுக்
காட்டினிலே துள்ளும்மான் போல வாழ்ந்தோம்!
தொட்டிலிலே தவழவிட்ட குழந்தை தானும்
தாய்பாடும் பாடல்கேட்டுக் கண்கள் உறங்கும்
வட்டநிலா வரவுபார்த்து அல்லி ஏங்க
வானவீதி பவனிவந்து வெளிச்சம் காட்டும்!
வெட்டிவைத்த கரும்புச் சொல் பெய்து கவிதை
வேள்விதனை முடித்தும்மை வணங்கு கின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - பதினாறு

# கனவு பலிக்குமா!

1. பெண்தானோ நானுமென்று பொட்டு இழந்து
பூவிழந்த கண்மணியின் ஆசை எல்லாம்
மண்தானோ இனியெனக்கு இடியும் வந்து
மார்புபாய வருமிரவில் துயில்கொள் ளாத
கண்தானோ இதுவென்று துயரில் உழன்று
கலங்குகின்றேன்! விளக்கெரிக்க நிலவு வராத
விண்தானோ என்வாழ்வு? என்று வருமோ
விடியலொன்று என்றவளும் புலம்ப லுற்றாள்.

2. பனிகுளித்த மலர்சுற்றி வண்டு பறக்கப்
பச்சைவண்ணப் பழத்தோட்டம் செல்லும் வேளை
கனியழுகிப் போனதென்று கண்டு தீராக்
கவலைகொண்டாள்! கணவனோடு உறவைப் பிரிந்து
தனிப்படகாய் பயணித்தேன்! வாழ்வுக் கடலில்
தத்தளித்து அலைமோதி நின்றேன்! உலகில்
இனியொருவர் துணையுமின்றி அபலை யானும்
எங்குசென்று ஆரிடத்தில் ஆறு வேனோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஓலையிட்ட குடிசையிலே வாழ்ந்தாலுமங்கே
ஒருகூட்டுப் பறவைகளாய்ப் பிரியா திருந்தோம்!
மாலையிட்ட கணவனையும் அமுதம் பிழிந்த
மதுரமொழி மக்களையும் இழந்த போது
ஆலையிட்ட கரும்பாகி நொந்தேன்! கொடிய
அரக்கர்எம் மீது தொடுத்த போரால் நெருப்புக்
கோலமிட்ட புண்ணாகித் துடித்தேன்! நிகழும்
கொடுமைக்கு விடிவுகாலம் என்று வருமோ!

4. நாட்டுவளம் அறியாத குறவ ருக்கு
நீதிநெறி கோவைகளா செவியில் ஏறும்?
காட்டேரி தனக்குபுலால் வெறுத்து ஒதுக்கும்
கடுநோன்பைச் செய்யென்றால் அதுவா நடக்கும்!
பூட்டுடைக்கும் திருடர்கள் மனதை மாற்றிப்
புனிதஉலா நடத்தலாமா? ஒற்று மைக்கு
வேட்டு வைக்கும் ஈனர்நெஞ்சில் சமாதானத்தின்
விதையெறியும் யுகப்புருஷன் யாரோ அறியேன்!

5. தன்மானம் உயிரென்று கருதி வாழ்ந்த
தமிழர்கள் மகிழ்ந்திருக்க ஒருநாள் மலரும்
பொன்னீழம் என்றிருந்தார் அதுவும் கொடிய
போராலே பொய்யாகிக் கனவா னதுவே!
வன்மோதல் கெடுபிடிகள் நிலவு மானால்
வலுவான சமாதானம் மலர்ந்து வருமா?
என்காலம் முடிவதற்குள் அமைதி விளக்கை
ஏற்றயாரும் வருவாரோ என்றாள் அபலை!

6. எதிர்பாரா வேளையில் கனத்த வண்டி
எகிறிவந்து முகாம் முன்னால் தரித்து நிற்க,
கதிகலங்கி அகதிகளும் பார்த்த நேரம்
கெதியாக வாங்கநெடுந் தூரம் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியமுகாம் கச்சாய்க்குச் செல்ல வேண்டும்!
புறப்படுங்க என்ற அறி வித்தல் கேட்டு
விதிதானோ இதுவென்று தலையில் அடித்து
வண்டியிலே ஏறினரே வாழ்வை நொந்து!

7. தோட்டாக்கள் யுகமழிந்து அமைதி திரும்பும்
தீர்வொன்று வாராதோ இங்கே! சிலரின்
காட்டாப்பின் ஊடாக வெளியே றுகின்ற
கீழ்த்தரத்துப் பம்மாத்தில் ஏமாந் தோமே!
கூட்டோடு அள்ளிவந்து கச்சாய் முகாமில்
கொட்டிவிட்டான் அகதிகளை! நாயும் படாத
பாட்டோடு தொடர்ந்து வந்த மனவு ளைச்சல்
பட்டலைந்தோம் பொறுமைக்கும் பூமி ஆனோம்!

8. இடியாகப் பலியெடுத்த கிளஸ்டர் குண்டால்
இனவழிப்பு நடந்ததையோ! மிச்சம் மீதி
அடிமையாக ஆரிடமும் சொல்ல முடியா
அகதியாக முகாமுக்குள் தள்ளப் பட்டோம்!
மடிப்பிச்சை கேட்டிரண்டு கைகள் ஏந்தும்
மனிதனிலும் இழிவாக இங்கு உடும்புப்
பிடிக்குள்ளே அகப்பட்டு மீள இயலாப்
பெருந்துன்பம் கண்மணிக்கு நேர்ந்த தம்மா!

9. சந்திக்கக் கண்மணியின் தாயும் தங்கை
சோதரனும் அக்காவும் வந்த நிலையில்
அந்திநேரம் பொங்கிநின்ற கடலின் அலைபோல்
உளமுருக விழிகளில் நீர் முட்டும்! ஒன்றாய்ப்
பந்தியிலே இலைபோட்டு இருந்து உண்டு
பசியாற மகிழ்ந்தநாளின் நினைவோ! அதனைச்
சிந்திக்க இயலாது கட்டித் தழுவி
சிறுபிள்ளை போலவர்கள் தேம்பி நின்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. தாகத்தால் நாவரண்டு போனால் குளிர்ந்த
தண்ணீரே தணித்துவிடும் யுத்தம் தந்த
சோகத்தால் இடிந்தநெஞ்சை ஆற்ற லாமோ!
சமூகபண்பை சவக்குழிக்குள் வீழ்த்தி விட்ட
நாகத்தின் தீயநஞ்சில் உருவெடுத்த
நீசர்கள் கையிலகப் பட்டால் முடிவு?
பூகம்பச் சுவாலைபட்ட பூவாய் எரிந்து
போகுமையோ! இந்தவாழ்வு தேவை தானா?

11. தேய்ந்துபோன அச்சாணி தன்னை நம்பித்
தேரோட்ட நினைக்கலாமா! விம்மி அழுது
ஓய்ந்துவிட்ட அகதிகளின் வாழ்வை நிமிர்த்த
உலகசமு தாயதுணை வேண்டும்! போரில்
மாய்ந்து போன உறவுகளும் உரிமை இழந்த
மன்னுயிரும் நீதிபெற வேண்டும்! மேற்கில்
சாய்ந்துவிட்ட பொழுதுமறு நாளில் உதிக்கும்!
சமுதாயம் மறுமலர்ச்சி காணும் உறுதி!

12. சுட்டாலும் சங்குநிறம் மாறா துண்மை!
சுழல்காற்றில் எம்பயணம் மேலும் தொடரும்!
மொட்டாக இருக்குமெங்கள் ஈழ நினைவு
முகைவெடித்து விரிந்தொருநாள் மலரும்! வானில்
சிட்டாகிப் பறந்துசுற்றும் குருவி தனக்குச்
சிறைவாசம் ஒருகேடா! உயரத் தொங்கும்
எட்டாத நிலவல்ல எமது உரிமை!
என்றாளே கண்மணியும் எதற்கும் துணிந்து!

13. நேசிக்கும் வதனியுடல் காய்ச்சல் காண
நெடுந்தூரம் கண்மணியும் கால்கள் கடுக்கப்
பூசிக்கும் கணவனோடு மூச்சு வாங்க
பயணித்தாள் மாத்தளனை நோக்கி விரைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊசிக்கும் மருந்திற்கும் காத்து நிற்க
எறிகணையால் பலவுயிர்கள் மடிந்த தையோ!
ஆசிக்கும் தமிழீழக் கனவு மட்டும்
எஞ்சிநின்றோர் கண்களிலே தெரிந்த தம்மா!

14. பூக்காட்டில் இளந்தென்றல் மேனி வருடப்
புள்ளிமான்கள் உலாவுதல் போல் வாழ்ந்த மக்கள்
தீக்காட்டில் செவ்வாழை எரிவ தைப்போல்
துடித்தலறிக் கொடுந்துயரால் உயிர்கள் எல்லாம்
நோக்காட்டில் நெளிந்துழன்று மடிய ஐ.நா
நிறுவனத்தின் பொதுச் செயலர் இரக்கமின்றிச்
சாக்காட்டில் மனிதகுலம் சரியக் கண்டும்
செயலற்று நின்றசோகம்! சொல்ல லாமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - பதினேழு

# துயரகாவியம் முடிகின்றது

1. எருக்கலைதான் வளர்ந்து முற்றிப் பற்றை யாக
எங்கெங்கு நோக்கினாலும் எங்கள் மண்ணும்
உருவெடுத்த வடிவதற்கு என்ன உவமை?
உலகரங்கில் புதுச்சாயம் பூசிக் கொள்ள
துருப்பிடித்த நெஞ்சமுள்ளோர் தம்மை மறந்து
துரோகமெனும் கூத்தினையே நடிக்கின்றாரே!
குருத்தெறிந்து மதாளித்த ஈழ நினைவைக்
களைந்துவிட எங்களுக்கோர் இதயம் உண்டா?

2. ஊழ்வினைதான் இதுவென்று பொய்யைக் கூறி
உண்மைக்குக் குழிபறித்தால் நம்பவா முடியும்!
தேழ்வரகில் நெய்வடிந்த தென்றல் நம்பக்
கூடியவன் முட்டாளே! ஒருநாள் மனதில்
கூழ்குடிக்க நினைத்துவிட்டால் மீசை பெரிதா?
கண்மணியின் குமுறுகின்ற நெஞ்சில் இனிமேல்
வாழ்ந்தாலும் பட்டுமேவீழ்ந் தாலும் மண்ணின்
விடிவைநானும் காண்பேனோர் நாளில் என்றாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கல்லில்நார் உரித்தாலும் உரித்து விடலாம்!
கயவரிடம் இரக்கமனம் காணல் அரிது!
சொல்லில் ஓர் உண்மை பேசி சத்தி யத்தின்
சிரந்தனிலே மலர்க்கிரீடம் சூட்டு வாரில்லை
நல்லிணக்கம் சமாதானம் தினமும் பேசி
நாத்தழும்பு ஏறினதோ? இங்கு காக்கும்
சல்லிவேராய் இனவொற்றுமை தழைக்கத் தொண்டு
செய்வதென்ற உயர்வுநிலை தோன்ற வேண்டும்!

4. வயற்புலத்தை வற்றாத நதிகு ளத்தை
வெடிகுண்டால் நிர்மூலம் செய்வ தைத்தான்
அயல்நாடு என்னவெளி நாடு என்ன
அக்கிரமம் கேட்டீரோ ஐயா! கொடிய
செயலிதனைப் பாருமென்றா சொல்லும் இல்லை
சொந்தநாட்டின் இறையாண்மை தன்னை மதித்து
சுயமாக விசாரணைகள் வேண்டும் என்று
சுயநலத்தின் ஆற்றுகையை நடத்தி முடிக்கும்!

5. சரமாரி போலஷெல்கள் பாய்ந்த போதும்
சுளையாகத் துயரங்கள் தொட்ட போதும்
இரந்துகெஞ்சி ஒருவேளை உணவு கேட்டு
ஓடியோடி அலைந்த போதும் உள்ளம் இறுகி
வரண்ட பாலை வனம் போல உணர்வு துடிக்க
வாழ்வினையே கண்மணியும் இழந்த போதும்
உரத்தோடு தாங்கிவந்த இதயம் இன்று
உயிர்வாட்டும் தீக்குண்டம் விழுந்த தையோ!

6. பாலைவனம் நடந்துசென்று பனியில் குளித்த
பூப்பறித்துப் புதுமனைகள் பரிசு கொடுக்க
மாலைகட்டத் துணிவுகொண்டு முயன்று பார்க்கும்
மூளைகெட்ட பிறவியோடு என்ன வாழ்வு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலேணி பிடித்தபடி உச்சி அடைந்து
நாவினிக்கத் தேன்பருகிக் களிப்போ மென்றால்
மேலேறிப் போய் வரவா முடியும்? அவளின்
மனக்குதிரை கட்டறுத்து ஓடிற்றம்மா!

7. நெய்திரண்டு வரும்வேளை தாழி உடைத்த
நிலைபோலக் கனவெல்லாம் மூளி யாகிப்
பொய்யாகிக் கதையாகி மாறிப் போகப்
புரிந்துணர்வு துளிகூட இல்லாப் புவியில்
தெய்வநீதி கூடவுமா அழியும்? இனியும்
தீமைசெய்யும் சத்துராதி தனையே கண்டால்
உய்யுமொரு வழியெங்கே பிறக்கும்! என்று
உளங்கலங்கும் கண்மணியைத் தேற்ற லாமோ?

8. நீரடித்து நீர்விலகா துண்மை! வெள்ளி
நிலவைவண்ண அல்லிப்பூ வெறுப்ப தில்லை!
வேரடிமண் போற்கலந்து எங்கள் உயிரை
விட்டகலா விடுதலையின் உணர்வை மீறி
ஓரடியும் பிசகாமல் வைத்தோம்! விரிந்த
உலகத்தின் நியமங்கள் ஒருகால் மாறும்!
பாரடிபார் உயிர்கலந்த உரிமை வாழ்வு
பட்டமரந் துளிர்ப்பது போல் புவியில் வளரும்!

9. நேசமென்ற ஏராலே மனத்தை உழுது
நிறையன்பு நீர்தேக்கிப் பாத்தி கட்டிப்
பாசத்தின் சிறகாலே நிழலும் குத்தி
பக்குவமாய் பயிர்வாழ்வைப் பேணிக் காத்தோம்!
மோசத்தின் தூதுவர்கள் தொடுத்த போரால்
முகாரியைத்தான் காதிரண்டும் கேட்ட தையோ!
தேசத்தின் விதியை யாரோ வந்து மாற்றித்
தருவாரோ என்றவளும் எண்ண லானாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சஞ்சலங்கள் நடந்துசென்ற வழியில் விழுந்த
சுவடுகளைக் கண்மணியும் கணக்குப் போட்டாள்!
வஞ்சமெல்லாம் முற்றிவெறி ஆட்டம் போட்ட
வக்கிரங்கள் மதமடக்க முள்ளி வாய்க்கால்
அஞ்சிடாமல் களமாடி உயிரா யுதமே
ஏந்துபுகழ் மறக்குடியை எண்ணும் போது
விஞ்சியெழும் துயர்தணிக்க மருந்து ஏது?
வரலாறு தியாகத்தை மறந்தா போகும்?

11. பொடிபட்டு உடல்சிதறப் புறநா னூறு
பாடியிங்கு பகைமுடித்த வீரம் எங்கே?
முடிவில்லா காவியப்போர் மூண்டு நிகழ்ந்த
முள்ளிவாய்க்கால் பரணிதந்த பெருமை எங்கே?
வடிகின்ற கண்ணீரின் சுவடு பொறித்த
விழியிரண்டைக் கண்மணியும் தடவும் வேளை
விடிகின்ற பொழுதறிந்து சேவல் கூவ
வைகறையின் நிலம்வெளுக்கத் தொடங்கீற்றம்மா!

12. பூமாரி பொழிந்துலகை மயக்கு கின்ற
பொன்னிலவும் அமுதமும் காட்ட வீழாக்
கோமானாய் உலகாண்ட களைப்பு தன்னால்
கடல்மடியில் சூரியனும் உறங்கி விட்டான்!
ஏமாற்றி வாழ்கின்ற எத்தர் நாட்டில்
ஒருவிடிவைக் கண்மணியும் காத்தி ருந்தாள்!
பாமாலை தந்தவளின் சரித்திரத்தைப்
புனைந்தநானும் விடைபெற்றேன் உம்மை வணங்கி!

CC *************

13962



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் ஏனைய நூல்கள்










01. பாசையூரானைப் பாடு (1992)

(கவிதை)

02. தூதுபோ தென்றலே (2000)

(கவிதை)

03. வியாகுல அன்னை வெண்பா (2001)

(கவிதை)

04. கூவிப்பறந்த கோகிலங்கள் (2003)

(கட்டுரை)

05. மடு அன்னை பிள்ளைத்தமிழ் (2004)


(கவிதை)

06. செம்மனத்தான் (2007)

(கூத்து)

07. பாஷையூரும் நாட்டுக்கூத்தும் (2009)

(ஆய்வு)















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

288445

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம், பாஷையூரைச் சேர்ந்த ஆசிரியரும் முதுபெரும் கவிஞரும் எழுத்தாளருமான பலருடைய மதிப்புக்கும் அபிமானத்துக்கும் உரிய மு.சிங்கராயர் அவர்கள் அரியபல படைப்புக்களை தமிழுலகிற்குத் தந்திருக்கின்ற முக்கியமான ஓர் ஆளுமைமிக்க படைப்பாளியாவார்.

1938இல் பிறந்த இவர், 32ஆண்டுகள் ஆசிரியப் பணியில் அயராது உழைத்திருக்கின்றார்.இளம் வயதிலிருந்தே கவிதை, கட்டுரை, மேடை நாடகம் எனப் படைக்கத் தொடங்கிய இவர் வீரகேசரி, தினகரன், சுதந்திரன், ஈழநாடு, பாதுகாவலன் போன்ற பத்திரிகைகளில் தமது ஆக்கங்களை எழுதி வந்திருக்கின்றார்.

தமிழ்மொழி மீது தணியாத தாகம் கொண்டவர், தமது நம்பிக்கையில் உறுதியான பற்றுடையவர். தான் வாழ்ந்த மண்ணையும் அதன் மக்களையும் மிகவே நேசித்தவர். இவற்றுக்கு இவரின் படைப்புக்களே தக்க சான்றாகும்.

1992 இல் பாசையூரானைப் பாடு, 2000 இல் தூது போ தென்றலே, 2001இல் வியாகுல அன்னை வெண்பா, 2003 இல் கூவிப் பறந்த கோகுலங்கள், 2004 இல் மடு அன்னை பிள்ளைத்தமிழ், 2007 இல் செம்மனந்தான், 2009 இல் பாசையூரும் நாட்டுக்கூத்தும் போன்ற நூல்களை தந்தவர் ஆவார்.

யாழ். ரத்னா, கலை ஞான வித்தகர், கலைச்சுடர், கலை விற்பன்னர், கலை வாரிதி, கலைத் தென்றல் போன்ற பட்டங்களையும் 2016 இல் கலாபூஷண அரச விருதினையும், கவிதைத் துறைக்காக 2017 இல் வடமாகாண முதலமைச்சர் விருதினையும் இவர் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

முதுமை, மிக நீண்ட காலமாக உடல் இயலாமை, நோயினால் ஏற்பட்ட தாக்கம் போன்றவைகளின் மத்தியிலும் இவரின் தொடர் இலக்கிய முயற்சிகளும் படைப்புக்களும் இவர் எத்தகைய தமிழ்ப்பற்றைத் தன்னகத்தே கொண்டிருந்தார் என்பதை எண்பிக்கின்றது. இவரின் கவிதைகள் காலம் கடந்தும் வாழும் என்பதை இவரின் படைப்புக்கள் பறைசாற்றி நிற்கின்றன.

அருட்திரு செ.அன்புராசா, அமதி,
இயக்குநர், அன்னை இல்லம்
கனகாம்பிகைக்குளம்
கிளிநொச்சி.

Print by : Mathi Colours Nallur 021 2229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org